# வானவில்

# VAANAVIL

இதழ் 182 மாசி 2026

ISSUE 182 FEBRUARY 2026


# அரசாங்கத்திடம் தீர்வுத்திட்டம் எதுவுமில்லை!




சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை தமிழரசுக் கட்சியின் தூதுக்குழு ஒன்றைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தாம் கொண்டு வரவுள்ள புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று கூறியிருக்கிறார்.

ஆனால், தமிழரசுக் கட்சி பல தடவைகள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன் பின்னரே, ஜனாதிபதி அந்தக் கட்சியின் தூதுக்குழுவை சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கினார் என்பதிலிருந்தே, ஜனாதிபதிக்கும் அவரது அரசாங்கத்துக்கும் இனப்பிரச்சினைத் தீர்வில் எவ்வளவு தூரம் அக்கறை இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பொதுவாகவே இந்த அரசாங்கத்தின் அணுகுமுறையில் ஒரு விடயத்தை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது, இந்த அரசாங்கம் பெரிய கட்சிகளை மட்டுமின்றி, சிறிய கட்சிகளையோ அல்லது சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளையோ, அரசின் பங்காளிக் கட்சிகளாக இணைத்துக் கொள்வதற்குத் தயாராக இல்லை என்பது ஒருபுறமிருக்க,

அரசாங்கத்துக்கு வெளியில் உள்ளவர்களின் ஆலோசனைகளைக் கூட செவிமடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இல்லை என்பதே அது.

தமது கட்சியான ஜே.வி.பியிடம் ஏற்கெனவே உள்ள திட்டங்களின்படியே அரசாங்கம் சகல விடயங்களையும் செய்து வருகிறது. அரசாங்கம் பொதுமக்களிடையே வேகமாகச் செல்வாக்கு இழந்து வருவதற்கு இதுவும் ஒரு காரணம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையை வைத்தே அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியையும் நோக்க வேண்டியுள்ளது.

அந்த வகையில், இனப்பிரச்சினை சம்பந்தமான ஜே.வி.பியின் நீண்டகால கொள்கை என்ன என்பதை முதலில் பார்க்க வேண்டும். அதன்படி பார்த்தால் –

ஜே.வி.பி. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஒருபோதும் ஏற்றுக் கொண்டது கிடையாது.

அதன் காரணமாக அவர்களுக்கென ஒரு பாரம்பரிய வாழ்விடப் பிரதேசம் உண்டு என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

எனவே, தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஜே.வி.பியின் இத்தகைய நிலைப்பாடு காரணமாகத்தான், கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த பல்வேறு அரசாங்கங்கள் சில நிர்ப்பந்தங்கள் காரணமாகத்தன்னும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயன்ற போதெல்லாம் ஜே.வி.பி. அவற்றுக்கெதிராக தீவிரமாகச் செயல்பட்டு வந்துள்ளது.

இதற்குப் பதிலாக, இனப்பிரச்சினை சம்பந்தமாக ஜே.வி.பியின் நிலைப்பாடென்பது, ஒற்றையாட்சியின் கீழ் அனைத்து இனங்களும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பது. ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்த பின்னரும் இதுவே அதன் நிலைப்பாடாக உள்ளது. இலங்கையில் ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடிய அனைத்து பேரினவாதக் கட்சிகளினதும் நிலைப்பாடும் இதுதான்.

அதனால்தான், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும், அவரது சில அமைச்சர்களும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என சம்பிரதாயபூர்வமாகச் சொல்லி வந்தாலும், அரசாங்கத்தின் சகல விடயங்களையும் தீர்மானிக்கும் சக்தி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# எப்ஸ்டீன் கோப்புகள்: அழுகி நாறும் முதலாளித்துவம்

அமெரிக்காவில் நிதி ஆலோசகராகவும் அரசியல் செல்வாக்கு மிகுந்தவராகவும் விளங்கிய பாலியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்ற ஜெஃப்ரி எப்ஸ்டீன் (Jeffrey Epstein) தொடர்பான இலட்சக்கணக்கான கோப்புகளை (Epstein Files) அமெரிக்க நீதித்துறை கடந்த டிசம்பர் 19th திகதியிலிருந்து வெளியிட்டு வருகின்றது. இதுவரையில் (ஜனவரி 30 வரை) 60 இலட்சம் ஆவணங்கள், 1,80,000 புகைப்படங்கள் மற்றும் 2,000 வீடியோக்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளன.

வெளியிடப்பட்டுள்ள கோப்புகள் எப்ஸ்டீனின் விரிவான வலையமைப்பு மற்றும் அவரின் செல்வாக்கு எந்தளவுக்கு இருந்திருக்கின்றது என்பதை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. இந்த கோப்புகளில் டொனால்ட் ட்ரம்ப், பில் கிளிண்டன், ஆண்ட்ரூ மவுண்ட்பேட்டன்–வின்ட்சர், எலான் மஸ்க், பில் கேட்ஸ், பீற்றர் மண்டெல்சன் போன்ற ஏராளமான முக்கியஸ்தர்களின் பெயர்கள் உள்ளடங்கியுள்ளன.

எப்ஸ்டீன் கோப்புகளில் ட்ரம்ப்பின் பெயர் 3,000 இற்கும் அதிகமான தடவைகள் இடம்பெற்று, இருவரும் இணைந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் வெளியாகியுள்ளதால், எப்ஸ்டீனுடன் இணைந்து ட்ரம்ப் பல ஆண்டுகளாக குற்றம் புரிந்துள்ளார் என்பது தெளிவாகியுள்ளது.

மேலும் இந்த கோப்புகளில் நோம் சோம்ஸ்கி, இந்திய பிரதமர் நரேந்திர மோடி உட்பட ஏனைய பலரது பெயர்களும் உள்ளன. எனினும், இந்த கோப்புகளில் ஒருவரது பெயர் உள்ளடங்கி இருப்பதை வைத்து மாத்திரம், குறித்த நபர் எப்ஸ்டீனுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார் அல்து குற்றங்களைப் புரிந்தார் என்று கூற முடியாது.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் 2002–2005 காலப்பகுதியில் பாம் பீச் (Palm beach) பகுதியில் அமைந்துள்ள எப்ஸ்டீனின் இல்லத்தில் வைத்து குறைந்தது 30 சிறுமிகள் – சிலருக்கு 14 வயது – பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டு, 14 வயது சிறுமி ஒருவரின் பெற்றோர் புளோரிடா பொலிஸாரிடம் எப்ஸ்டீன் தனது பாம் பீச் இல்லத்தில் வைத்து தங்கள் மகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக ஒரு புகாரை அளித்தனர். பொலிஸார் அந்த வீட்டைச் சோதனையிட்டபோது, வீடு முழுவதும் சிறுமிகளின் புகைப்படங்கள் இருப்பதைக் கண்டறிந்தனர்.

ஆயுள் தண்டனை பெற்றுத் தரக்கூடிய கடுமையான குற்றச்சாட்டுகள் கொண்ட இந்த வழக்கில், அரசு தரப்பு வழக்கறிஞர்கள் 2008 இல் எப்ஸ்டீனுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலமாக, அவருக்கு 18 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனையின் போதும் கூட, வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு 12 மணித்தியாலம் தனது அலுவலகத்திற்குச் சென்று வர 'பணி நிமித்தமான விடுப்பு' அவருக்கு வழங்கப்பட்டது. பின்னர் 13 மாதங்களில் அவர் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டார்.

எப்ஸ்டீனின் வலையில் வீழ்ந்த பல பெண்கள் பகிரங்கமாக குற்றச்சாட்டுகளை முன்வைத்ததால், ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் ஜூலை 6, 2019 அன்று நியூயோர்க் மாநில சட்ட அமுலாக்கத்துறையால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் ஒரு வருடத்தின் பின்னரே நடக்கும் என்பது உறுதியானதை அடுத்து, ஓகஸ்ட் 2019 ஓகஸ்ட் 10th திகதி தனது சிறை அறையில் அவர் தற்கொலை செய்து கொண்டதாக, அவரது பிணம் கண்டெடுக்கப்பட்டது. அதன்பின்னர் அமெரிக்காவில் எப்ஸ்டீனுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

எப்ஸ்டீன் தற்கொலை செய்து கொண்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், எப்ஸ்டீனுக்கும் ட்ரம்ப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருந்ததாகவும், அதுபற்றிய இரகசியம் வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காக எப்ஸ்டீன் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அமெரிக்க அரசியல் தரப்பில் வலுவான சந்தேகங்கள் உள்ளன. எப்ஸ்டீன் வெளியில் வந்தால் பல முக்கிய நபர்களின் பெயர்கள் அடிபடும் எனக் கருதிய பெரும் புள்ளிகள், அவரை சிறையில் வைத்தே கதையை முடித்ததாக சொல்லப்படுகின்றது.

எப்ஸ்டீன் கோப்புகள் பொதுத்தளத்தில் வெளியிடப்பட்ட போதிலும், எப்ஸ்டீனின் கூட்டாளிகள் – ஊடக அதிபரும் இஸ்ரேலிய உளவாளியுமான ரொபர்ட் மேக்ஸ்வெல்லின் (Robert Maxwell) மகள் கிஸ்லைன் மேக்ஸ்வெல்லைத் (Ghislaine Maxwell) தவிர – யாரும் கைது செய்யப்படவில்லை. எப்ஸ்டீனின் குற்றங்களை மூடிமறைத்தல் மற்றும் அவரது குற்றங்கள் குறித்து அதிகாரிகளை எச்சரிக்கத் தவறியதற்காக நீதியின் முன் எவருமே நிறுத்தப்படவில்லை.

எப்ஸ்டீனுக்குப் பின்னால் அமெரிக்காவிலுள்ள அமைப்புமுறை மிகவும் சக்திவாய்ந்தது. இது அமெரிக்க முதலாளித்துவ ஜனநாயக அரசியல் மற்றும் நீதித்துறையில் ஆழமாக ஊடுருவியுள்ளது என்பதற்கு ஆதாரமாக மேலும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். கடந்த ஆண்டு ஓகஸ்டில் ஒரு வயது குறைந்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததற்காக அமெரிக்காவில் இஸ்ரேலின் மூத்த அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் எந்த நிபந்தனையும் மற்றும் கண்காணிப்புமின்றி பிணையில் விடுவிக்கப்பட்டதால், அவர் சுலபமாக இஸ்ரேலுக்கு தப்பிச் சென்றுவிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை எப்ஸ்டீன் கோப்புகளை ஆய்வு செய்து, எப்ஸ்டீனின் வலையமைப்பு ஓர் உலகளாவிய குற்றவியல் நிறுவனமாக செயல்பட்டதையும், பாலியல் சுரண்டல், கடத்தல், வன்கொடுமை, கொலை உள்ளிட்ட கடுமையான குற்றங்களின் கீழ் இந்த நிறுவனமயமாக்கப்பட்ட நிகழ்வுகள் நடந்துள்ளதையும் சுட்டிக்காட்டி இருக்கின்றது. 'பாரபட்சமற்ற, சுதந்திரமான விசாரணை ஒன்று தேவையாகவுள்ளது. செல்வாக்கு மிக்கவராக இருந்தாலும் சட்டத்திற்கு மேலானவர் ஒருவரும் இல்லை என்பதை வலியுறுத்த வேண்டும்' என ஐ.நா மனித உரிமைகள் சபை மேலும் தெரிவித்திருக்கின்றது.

பணம், அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக உலகளவில் மோசமான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. ஒக்ரோபர் 7, 2023 முதல் காஸாவில் 20,000 குழந்தைகளைக் கொல்வதை ஆதரித்த தார்மீக ரீதியாக திவாலான அமைப்புமுறை, இப்போது குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக எப்ஸ்டீன் கோப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை ஒருபோதும் நம்ப முடியாது.

வெளி உலகத்திற்கு தெரியாமல் அடிப்படையில் மிகவும் மோசமான மற்றும் மனித சமூகத்திற்கு, குறிப்பாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அமெரிக்காவில் இத்தனை ஆண்டுகள் எவ்வாறு தொடர்ந்தன, தொடர்கின்றன? மனிதனிடம் ஆட்சி அதிகாரமும், பண பலமும் செல்வாக்கும் அளவுக்கதிமாக குவியும் போது, அவனுக்குள் இருக்கும் மிருகம் விழித்தெழுகின்றது, தன்னை தட்டிக் கேட்க யாரும் இல்லை என்ற ஆணவம் அவனை வந்தடைகின்றது என்பதற்கு எப்ஸ்டீன் கோப்புகள் சாட்சியம் பகிர்கின்றன. இந்த ஆணவம் மென்மேலும் ஆழமாக வேர்விட்டு படர முன்பு, அமெரிக்க மக்கள் கிளர்ந்தெழுந்து தங்கள் அமைப்புமுறையை தகர்க்க வேண்டிய காலகட்டம் இது.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

# ஜே.ஆர்.ஜே (JRJ) நோய்க்குறி



அரசியல்வாதிகள் அதிகாரத்தின் சுவையை ஒருமுறை அனுபவித்துவிட்டால், அதனைத் தாரைவார்க்க விரும்புவதில்லை. அந்தப் பிடியைத் தக்கவைத்துக் கொள்ளவதற்கான தேவையான அனைத்தையும் அவர்கள் செய்கிறார்கள். தேர்தல் பிரச்சாரங்களின் போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக உறுதியளிக்கும் 'நீதிமான்களான' தலைவர்கள், பதவிக்கு வந்தவுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் அதீத அதிகாரங்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம் (PTA) போன்ற கொடூரமான சட்டங்கள் மற்றும் அவசரகாலச் சட்ட விதிமுறைகளைத் தொடர்ந்து பேணுவதற்கு இதுவே காரணமாக இருக்கலாம். ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன (JRJ) மாத்திரமே தனது சர்வாதிகார எண்ணங்களை மறைக்காமல் வெளிப்படையாகச் சொல்லிச் செயற்பட்டவர்.

தமது அரசியல் நலன்களுக்காக அவசரகாலச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்திய முந்தைய அரசாங்கங்களுக்கும், தற்போதைய ஆட்சிக்கும் இடையில் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட 'டிட்வா' (Ditwah) சூறாவளியைத் தொடர்ந்து, ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையை நீடிப்பதற்கு 06.02.2026 அன்று பாராளுமன்றம் வாக்களித்தது. ஜனநாயக ரீதியான மாற்றுக் கருத்துகளை ஒடுக்கும் உள்நோக்கத்துடனேயே ஜே.வி.பி – என்.பி.பி (JVP-NPP) அரசாங்கம் அவசரகால நிலையை நீடிக்கிறது எனக் கூறி எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

அவசரகால நிலை நீடிக்கப்படுவது ஜனநாயகத்தை ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்டது என்று எதிர்க்கட்சிகள் கூறிய போது, 'பரந்த நரகத்தைவிட அதிகமான பிசாசுகளை' எதிர்க்கட்சிகள் காண்கிறார்கள் என்பதைப் பொதுமக்களுக்கு நம்ப வைக்க அரசாங்கத் தரப்பினர் 06.02.2026 அன்று பெரும் முயற்சி எடுத்தனர். எவ்வாறாயினும், எதிர்க்கட்சியின் வாதங்கள் நியாயமானவையாகவே இருந்தன. தற்போதைய நிவாரண மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு அவசரகாலச் சட்டங்கள் தேவையில்லை என வாதிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அதற்குப் பதிலாக அரசாங்கம் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து, பேரிடர் மேலாண்மைக்கென புதிய அமைச்சொன்றை உருவாக்க வேண்டும் எனக் கூறினார். இது ஒரு வலுவான வாதமாகும்.

2025 நவம்பரில் அரசாங்கத்தின் பேரிடர் தயார்நிலை மிகவும் மோசமாக இருந்தது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தீவிர வானிலை நிகழ்வுகளால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்று என்பதால், பேரிடர் மேலாண்மைக்கெனத் தனி அமைச்சும், தற்போதுள்ள சட்டங்களுக்கு மேலதிக அதிகாரமும் அவசியமாகும்.

வேடிக்கை என்னவென்றால், அவசரகாலச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாக தற்போதைய நிர்வாகத்தைத் திட்டும் பலரும், தாங்கள் பதவியில் இருந்தபோது அதையேதான் செய்தார்கள். 'பாம்பின் கால் பாம்பறியும்' என்ற உள்ளூர் பழமொழிக்கு ஏற்ப, தியவன்னா ஏரிக்கரையில் (பாராளுமன்றத்தில்) 'பாம்புகள்' மோதிக்கொள்ளும்போது ஒன்றையொன்று பற்றிச் சொல்லும் கருத்துக்களை நாங்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

'டிட்வா' சூறாவளியின் பின்னர் அவசரகால நிலையை பிரகடனப்படுத்துமாறு எதிர்க்கட்சிகளே கோரின என்ற காரணத்தைச் சொல்லி, அவசரகாலச் சட்டங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதை அரசாங்கம் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

தொழிற்சங்கங்கள் எவ்வளவு அழுத்தம் கொடுத்தாலும் 2027 ஆம் ஆண்டு வரை சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி திஸாநாயக்க அறிவித்துள்ளார். தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையை ஒடுக்கப் பயன்படும் அவசரகாலச் சட்டங்களை, ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கையோடு இணைத்தே பார்க்க வேண்டும். தமது தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தப் போவதாக எச்சரித்துள்ள வைத்தியர்களைக் கையாள்வதில் அரசாங்கம் கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறது. அரசாங்க ஆதரவுக் குழுக்கள் சாதாரண குடிமக்களைப் போலத் தோன்றி, அரச துறை தொழிற்சங்கங்களை அடக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றன. ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் மீதான தனிப்பட்ட விமர்சனங்களைக் கையாளுவதற்கு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துமாறு பொது பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல பொலிஸாரிடம் கேட்டுள்ளார்.

இலங்கையில் கருத்துச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள

அச்சுறுத்தல்கள் குறித்தும், குறிப்பாக அவதூறு என்ற பெயரில் ஊடகவியலாளர்கள் பொலிஸ் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுவது குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில், 2024 தேர்தலுக்கு முன்னதாக ஒழிக்கப்படும் என ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் இப்போதும் கைதுகள் இடம்பெறுகின்றன. 'பயங்கரவாதத் தடைச் சட்டம் உட்பட அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் நீக்குதல் மற்றும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிவில் உரிமைகளை உறுதிப்படுத்துதல்' என அவர்களது 'வளமான தேசம், அழகான வாழ்க்கை' என்ற கொள்கைப் பிரகடனத்தில் (பக்கம் 129) கூறப்பட்டிருந்தது. முன்னொரு காலத்தில் திஸாநாயக்க எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, அவசரகாலச் சட்டங்களைத் தவறாகப் பயன்படுத்திய அரசாங்கங்களைக் கடுமையாகச் சாடினார்.

டி.பி. விஜேதுங்கவைத் தவிர, மற்ற அனைத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளும் இந்த 'ஜே.ஆர்.ஜே நோய்க்குறி' (JRJ syndrome) என்று மனநிலையால் பாதிக்கப்பட்டவர்களே. இது ஜனாதிபதி பதவியில் இருப்பவர்களை அரச நிறுவனங்களின் அதிகாரங்களைத் தமதாக்கிக் கொள்ளவும், அனைத்தையும் தமது அரசியல் கட்சிகளின் நலன்களுக்கு அடிபணியச் செய்யவும் தூண்டுகிறது. ஜனாதிபதி திஸாநாயக்க, சில சாட்டை அல்லது வேறு எதையோ வைத்து அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது ஆச்சரியமில்லை.

அதுமட்டுமன்றி, அவர் இப்போது ஹெலிகாப்டரில் பயணிக்கிறார் அவரது பயணங்களுக்காக இரண்டு ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. முன்னைய ஜனாதிபதிகள் இப்படிச் செய்தபோது அவர்களைக் கண்டித்து, 'அவசர நிலை ஏற்பட்டால் ஒரு ஹெலிகாப்டரில் இருந்து இன்னொன்றுக்கு ஜனாதிபதி நடுவானில் தாவுவாரா?' என்று கிண்டலாகக் கேட்டவர், இவர். இத்தகைய நடத்தை ஒரு பிரபலமான பழமொழியை நினைவூட்டுகிறது: 'உண்ண நினைப்பவனுக்கு கபரகொயா கூட உடும்பாகத் தோன்றுமாம்'.

**–'தி ஐலண்ட்' (The Island) பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம், 09.02.2026**

# தொழில்நுட்ப வளர்ச்சியை பற்றிய மார்க்சிய பார்வை என்ன?

*(திருவனந்தபுரத்தில் அண்மையில் நடைபெற்ற இ.எம்.எஸ் ஸ்மிருதி நிகழ்வில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் உ. வாசுகி ஆற்றிய உரையின் சிறிய பகுதி)*

அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய இரண்டும் எந்தவொரு வளர்ச்சிக்கும் முக்கியமானவை. இவை மாறுவதும், வளர்வதும், வலுப்பெறுவதும் தொடர்ச்சியான செயல்முறை. இவை உற்பத்தி சக்திகளின் ஒரு பகுதி ஆகும்.

தொழில்நுட்பம், அதனளவில் முதலாளித்துவத் தன்மை கொண்டதோ அல்லது சோசலிஸ்ட் தன்மை கொண்டதோ அல்ல. கணனிகள் என்றால் முதலாளித்துவம், செயற்கை நுண்ணறிவு என்பது சோசலிஸ்ட் என்று யாராவது சொல்ல முடியுமா? அவற்றை யார் உடைமையாக வைத்துள்ளார்கள்? யார் கட்டுப்படுத்துகிறார்கள்? யார் பயனடைகிறார்கள்? என்பதைப் பொறுத்தே, அதற்கான பதில்கள் அமையும். எனவே தொழில்நுட்பமானது, அது செயல்படும் சமூக அமைப்பைப் பொறுத்து வர்க்கத் தன்மையைக் கொண்டுள்ளது.

எந்தவொரு சமூகத்திற்கும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி அவசியம். இது வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் விதி.

ஒரு சோசலிச சமூகத்தில், உற்பத்தி



சாதனங்கள் மக்களுக்கே சொந்தமானவை. அதாவது, சோசலிச அரசுக்கு சொந்தமானவை. இரண்டாவதாக, அதன் நன்மைகள் அல்லது இலாபம் மக்களுக்குச் செல்கிறது. இது ஒரு குறிப்பிட்ட தனிநபர் அல்லது பெருநிறுவனத்தின் கையகப்படுத்துதலுக்கானது அல்ல. எனவே, சோஷலிச அமைப்பில் நிலைமை மிகவும் வித்தியாசமானது.

முதலாளித்துவ சமூகத்தில், முழு அமைப்பும் கோர்ப்பரேட்டுகளின் தேவைகளுக்கு சேவை செய்யும்போது, தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவுகள் வேறுபட்டவையாக அமைகின்றன. நாம் அதை சமாளிக்க வேண்டும். தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் வாய்ப்பை அனைவருக்கும் கிடைக்கச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

மார்க்ஸ், லெனின் போன்ற முன்னோடிகள் தொழில்நுட்பத்தின் இரட்டை பாத்திரத்தைப் பற்றி பேசியுள்ளனர், எழுதியுள்ளனர். தொழில்நுட்ப வளர்ச்சி, முதலாளித்துவத்தின் கீழ் சுரண்டலைத் தீவிரப்படுத்தும் கருவி, அதுவே சோசலிசத்தின் கீழ் விடுதலைக்கான சாத்தியக்கூறு என மார்க்ஸ் கூறுகிறார். தொழில்நுட்பம் நடுநிலையானது அல்ல. அது சமூக அமைப்பைப் பொறுத்து, வர்க்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துகிறது எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

லெனினும், தொழில்நுட்பத்தின் வேறுபட்ட பாத்திரத்தைப் பற்றி பேசுகிறார். ஏகாதிபத்தியம் தொழில்நுட்பத்தை ஆயுதமாக்குகின்றது. புதிய நுட்பங்களை, காப்புரிமைகளை வாங்கிக் குவிப்பதன் மூலம், தொழில்நுட்ப மேலாதிக்கத்தை உருவாக்கி, ஏகபோக மூலதனத்தை வலுப்படுத்த உதவுகிறது என்று விளக்குகிறார்.

அக்காலகட்டத்தில், டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு வரை ஊகிக்க முடியாதிருக்கலாம். ஆனால் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கை சரியாக கணித்து, இயந்திரமயம், தொழில் நுட்ப வளர்ச்சியை முதலாளித்துவம் எவ்வாறு பயன்படுத்தி, உற்பத்தி சக்திகளை

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# லெனினிசமும் வியட்நாமியப் புரட்சியும்

பல நூற்றாண்டுகளாக சுதந்திரம் அடைய வேண்டும் என்ற அடக்க முடியாத ஆசை வலுப்பெற்றிருந்த வியட்நாமிய மக்கள், பிரெஞ்சு காலனித்துவவாதிகள் தம்மீது சுமத்தியிருந்த வெறுப்பு நிறைந்த காலனித்துவ நுகத்தடிககு எதிராக உறுதியுடனும், சமரசமின்றியும் போராடினர்.

ஆனால் சோவியத் ஒக்ரோபர் புரட்சிக்கு முன்பு அவர்களின் போராட்டம் எப்பொழுதும் தோல்வியில் முடிந்தது. ஏனெனில், அது திசைகாட்டி இல்லாத, திக்குத்தெரியாத கடல்களில் பயணிக்கும் பயணம் போன்று இருந்தது.

மாபெரும் ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் ஒளி, இருளின் போர்வையைத் துளைத்து, அடிவானத்தை ஒளிரச் செய்தது. தேசிய மற்றும் காலனித்துவ பிரச்சினைகள் குறித்த லெனினின் ஆய்வறிக்கைகள், கிழக்கு நாடுகளின் விழிப்புணர்வில், தேசிய விடுதலைக்கான நமது போராட்டத்தில் நம்பகமான வழிகாட்டியாக மாறியது.

லெனின் நமது மக்களுக்கு சுதந்திரத்திற்கான பாதையைக் காட்டினார். மேலும் வெற்றியை அடைவதில், மிகவும் சக்தி வாய்ந்த மற்றும் பயனுள்ள காரணியையும் சுட்டிக்காட்டினார்.

கட்சி சோதனைகளை எதிர்கொள்ளும் போது சுய தியாக உணர்வையும், புரட்சியின் மீது எல்லையற்ற பற்றையும் கம்யூனிஸ்ட்டுகளுக்குக் கற்பித்தவர் லெனின் தான். புரட்சியின் மீது புரட்சியாளர்களுக்கு எல்லையற்ற நம்பிக்கை இல்லையென்றால், எந்தப் புரட்சியும் சாத்தியமில்லை. இதுதான் லெனின் எமக்குக் கற்றுக் கொடுத்த பாடம்.

அவர் எங்களை, கம்யூனிஸ்ட்டுகளை, தீவிர தேசபக்தர்களாகவும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துவவாதிகளாகவும் ஆக்கினார்.

ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு தேவையான முக்கியமான குணாம்சங்களில் ஒன்று, மக்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை என்றும், மக்கள் மீது ஆழ்ந்த அன்பு என்பது கம்யூனிஸ்ட்டுகளின் ஒவ்வொரு



செயலையும், ஒவ்வொரு சிந்தனையையும், ஊக்குவிக்கும் உணர்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியவர் லெனின் தான்.

புரட்சியின் உண்மையான வீரர்களை, மக்களின் உண்மையான ஊழியர்களை, அலங்கரிக்கும் குணங்களான மிகுந்த எளிமை மற்றும் அதீத அடக்கத்திற்கு லெனின் நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தார்.

உலகம் முழுவதையும் உலுக்கிய ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றி காரணமாக, மார்க்சியம் படிப்படியாக வியட்நாம் முழுவதும் பரவியது. 1930 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தோசீன கம்யூனிஸ்ட் கட்சி (இக்கட்டுரை எழுதப்பட்ட 1960 ஆம் ஆண்டில் வியட்நாம் தொழிலாளர் கட்சி – தற்பொழுது வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி) பிறந்து புரட்சியின் தலைமையை உறுதியாக ஏற்றுக்கொண்டது.

இரண்டாம் உலகப் போர் வெடித்த சிறிது நேரத்திலேயே, வியட்நாமை யப்பான் படையெடுப்பாளர்கள் ஆக்கிரமித்தனர். அவர்கள் நமது நாட்டின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவதற்காக பிரெஞ்சு காலனித்துவவாதிகளுடன் இணைந்து செயல்பட்டனர். இந்தச் சூழலில் எமது கட்சியின் கொள்கை புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்தது.

காலனித்துவவாதிகளுக்கு எதிரான தளங்கள் அமைக்கப்பட்டன. வியட்நாம் விடுதலைப்படையின் முதல் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சி யப்பானிய படையெடுப்பாளர்கள் மீது கெரில்லாத் தாக்குதல்களைத் தொடங்கியது (1942 – 1945). அத்துடன், பாசிசத்திற்கு எதிரான சர்வதேசப் போராட்டத்திலும் இணைந்தது.

இந்த அனைத்துப் போராட்டங்களும், வீரமிக்க சோவியத் செஞ்சேனையால் பாசிசம் தோற்கடிக்கப்பட்ட உடனேயே, அதிகாரத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட நாடு தழுவிய எழுச்சியை நடத்துவதை சாத்தியமாக்கியது. இது 1945 ஆம் ஆண்டு வெற்றிகரமான ஓகஸ்ட் புரட்சியாகும். இதன் மூலம் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு உருவானது.

1945 ஓகஸ்ட் புரட்சியின் வெற்றி, ஒரு காலனித்துவ நாட்டில் முதல் தேசிய விடுதலைப் புரட்சியில் லெனினின் போதனைகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

நமது நாட்டில் சோசலிசத்தைக் கட்டியெழுப்புவதும், ஒரு சிறந்த சோசலிச குடும்பத்தில் இணைவதும், ஒரு பின்தங்கிய காலனித்துவ நாடு முதலாளித்துவ வளர்ச்சியின் கட்டத்தைத் தாண்டி, சோசலிசத்தை நோக்கி முன்னேற முடியும் என்ற லெனினின் ஆய்வை நிறைவேற்றுவதாகும்.

வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அனைத்துத் துறைகளிலும் அடைந்துள்ள வெற்றிகள், ஒருபுறம் தொழில்மயமாக்கல் மற்றும் கூட்டுப் பொருளாதாரம் குறித்த லெனினின் வழிகாட்டுதல்களை யதார்த்தமாக்க செயல்பட்ட நமது மக்களின் சுயதியாகம், வீரம் மற்றும் படைப்புச் செயற்பாடு ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றன. மறுபுறம், சோவியத் யூனியன் மற்றும் சோசலிச நாடுகளின் தன்னலமற்ற, சகோதரத்துவ உதவிகளாலும் தீர்மானிக்கப்படுகிறது.

கட்சி தனது புரட்சிகர இயக்கத்தை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்திலிருந்தும், ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கங்களிலிருந்தும் தனிமைப்படுத்தாததால், நாம் அனைத்து சிரமங்களையும் கடந்து மக்களை மகத்தான வெற்றிகளுக்கு இட்டுச்செல்ல முடிந்தது.

நமது நாடு தற்காலிகமாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது.

1. வியட்நாமின் விடுவிக்கப்பட்ட வடக்குப் பகுதியில் சோசலிசம் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.
2. தெற்குப் பகுதி ஏகாதிபத்தியவாதிகளினதும், அவர்களது

கைக்கூலிகளினதும் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்கள் தெற்கு வியட்நாமை ஒரு அமெரிக்க காலனியாகவும், இராணுவத்தளமாகவும் மாற்ற விரும்புகிறார்கள். இதன் மூலம் ஒரு புதிய உள்நாட்டு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுகிறார்கள்.

தற்போதைய சூழ்நிலையில், வியட்நாமியப் புரட்சி இரண்டு பணிகளை எதிர்கொள்கிறது. முதலாவதாக, வடக்கு வியட்நாமில் சோசலிசத்தைக் கட்டியெழுப்புதல். இரண்டாவதாக, தெற்கில் தேசிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்தல். இந்த இரண்டு பணிகளும் அமைதியை வலுப்படுத்துவதற்கும், ஜனநாயகத்தின் அடிப்படையில் நாட்டை மீண்டும் ஒன்றிணைப்பதற்கும் வழிவகுக்கும்.

**நமது மக்கள் எத்தனையோ சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவித்தாலும், அவர்கள் நிச்சயம் முழுமையான வெற்றியைப் பெறுவார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நமது நாட்டிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்படும். நமது தாயகம் மீண்டும் ஒன்றிணைக்கப்படும். வடக்கு, தெற்கு மக்கள் ஒற்றுமையாக வாழ்வார்கள்.**

முழுக் கட்சியும், முழு மக்களும் தங்கள் அணிகளைப் பலப்படுத்திக்கொண்டு, அமைதியான, ஒன்றுபட்ட, சுதந்திரமான, ஜனநாயக மற்றும் வளமான வியட்நாமை உருவாக்கப் போராடி, உலகப் புரட்சிகர இலட்சியத்திற்கு தமது பங்களிப்பைச் செய்யட்டும்.

தென்கிழக்காசியாவில் நமது நாடு சோசலிசத்திற்கான முன்னேற்றப் பாதையில் உள்ளது. தென்கிழக்காசியாவிலும், உலகம் முழுவதிலும், சோசலிச சக்திகளை வலுப்படுத்துவதற்கும், அமைதியைப் பாதுகாப்பதற்கும் தீவிர பங்களிப்பை வழங்குவது நமது பணியாகும்.

(இந்தக் கட்டுரை 1960 இல் ஹோசிமின் அவர்களால் எழுதப்பட்டது. அப்பொழுது வியட்நாம் ஏகாதிபத்தியவாதிகளால் வடக்கு – தெற்கு என இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1975 இல் தென் வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தோற்கடிக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டார்கள். 1976 இல் இரண்டு பகுதிகளும் ஒரே நாடாக ஒன்றிணைக்கப்பட்டது. அப்போது ஹோசிமின் காலமாகி (1969) விட்டிருந்தபடியால், அவர் கனவுகண்ட தென் வியட்நாமின் விடுதலையையும், வியட்நாமின் ஒன்றிணைப்பையும் காணும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் நாட்டின் விடுதலைக்காக அவர் ஆற்றிய தலைமைப் பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக, தென் வியட்நாமின் தலைநகரான சைக்கோனின் பெயர் ஹோசிமின் நகரம் என மறு பெயரிடப்பட்டது.

ஹோசிமின் என்ற பெயரின் அர்த்தம் “உலக ஞானம்” என்பதாகும். அவருடைய உண்மையான பெயர் நுயென் டாட் தான் என்பதாகும்.

அவர் ஒரு கிராம ஆசிரியரின் மகனாகப் பிறந்தார் (1890 – 1969). தனது இளம் வயதிலேயே புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார். முதலில் ஒரு தேசபக்தராக தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த ஹோசிமின், பின்னர் ஒரு புரட்சிகர மார்க்சிய – லெனினியவாதியாக வளர்ச்சி பெற்றார்.

அது பற்றி அவர், “லெனினிசத்திற்கு என்னை வழி நடத்திய பாதை” என்ற பிரசுரத்தில் எழுதுகையில், “போராட்டத்தின் போக்கில் படிப்படியாக மார்க்சிய – லெனினியத்தைப் படித்ததின் மூலமாகவும், நடைமுறை செயல்பாடுகளில் பங்கேற்றதன் மூலமாகவும், சோசலிசம் மற்றும் கம்யூனிசம் மட்டுமே ஒடுக்கப்பட்ட நாடுகளையும், உலகம் முழுவதுமுள்ள மக்களையும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும் என்பதைப் படிப்படியாக உணர்ந்தேன்” எனக் கூறியுள்ளார்.

இறுதியில் அவர், வியட்நாம் மக்களின் மாபெரும் தலைவராக மட்டுமின்றி, உலகம் முழுவதுமுள்ள அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் தலைவராகவும், உலக கம்யூனிச இயக்கத் தலைவர்களில் ஒருவராகவும் எழுந்து நின்றார்.)

## புரட்சிகர சிந்தனைகள் நூலகங்களில் இருந்தே உருவாயின!

மனித நாகரிகத்தின் பாதையை மாற்றிய புரட்சிகர சிந்தனைகள் அனைத்தும் நூலகங்களின் அறிவு வளங்களிலிருந்தே உருவாயின என்று மூத்த பத்திரிகையாளர் என்.ராம் தெரிவித்தார். இந்திய நூலக காங்கிரஸின் நான்காவது மாநாடு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பெப்ரவரி 16ந் திகதி தொடங்கியது. நாடு முழுவதிலிருந்தும் 500 இற்கும் மேற்பட்ட பிரதி நிதிகள் பங்கேற்றுள்ள இந்த இருநாள் மாநாட்டைத் தொடங்கி வைத்து என்.ராம் பேசியதாவது:

**பன்மைத்துவத்தின் அடையாளம் நூலகங்கள்**

“இந்திய அரசியலமைப்பின் சமத்துவம், கல்வி மற்றும் பன்முகப் பண்பாடு ஆகிய அடிப்படைகளை இந்திய நூலக காங்கிரஸ் தன்னுள் கொண்டுள்ளது. டெல்லியில் இருந்து கொண்டு எல்லாவற்றையும் ஒற்றைத் தன்மையாக மாற்ற முயலும் எதேச்சதிகாரப் போக்குகளையும், ஜனநாயகத்தை ஒடுக்கும் அரசியல் திட்டங்களையும் இந்த இயக்கம் மறுக்கிறது. அறிவுப் பரவலின் மூலம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதே இதன் நோக்கம். பொதுநூலகங்கள் சமூக நீதிக்கான கருவிகளாகச் செயல்பட வேண்டும். உதாரணமாக, கேரளாவின் கண்ணூர் மாவட்டத் தில் உள்ள நூலகங்களின் எண்ணிக்கை, உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஒட்டுமொத்த நூலகங்களை விட அதிகமாக உள்ளது. இதுவே அந்தந்த மாநிலங்களின் ஜனநாயக நிலையைப் பறைசாற்றுகிறது.



**மார்க்ஸ் – லெனின் காட்டிய வழி**

கார்ல் மார்க்ஸ் தனது வாழ்நாளின் பெரும்பகுதியைப் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தின் வாசிப்பு மண்டபத்தில் கழித்தார். அவரது

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாதது தவறாகும்!

**- பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்**

**பே**ராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் *1994* ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்ததில் இருந்து ஏறத்தாழ அனைத்து அரசாங்கங்களிலும், ஏறத்தாழ அனைத்து முக்கியமான மற்றும் மிகவும் பொறுப்பான இலாகாக்களை வகித்த ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் ஆவார். இவர் பொருளாதாரம், கல்வி, வெளிவிவகாரங்கள், அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை போன்ற பிரதான துறைகளில் பாரிய அனுபவத்தைக் கொண்டிருக்கிறார். சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும் கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் பீரிஸ் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக *1994* இல் சந்திரிகா பண்டாரநாயக்க அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் அரசியலில் நுழைந்தார்.

வெளிநாட்டு வர்த்தகம், நீதி மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள், வெளிநாட்டு அலுவல்கள், கல்வி, ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதி (துணை) போன்ற துறைகளில் அமைச்சரவை இலாகாக்களை பேராசிரியர் பீரிஸ் வகித்ததோடு, முன்னைய ஜனாதிபதிகளில் பெரும்பாலோருடன் இணைந்து பணியாற்றியுமுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு எதிராக நிதி, கல்வி, சட்டத்தின் ஆட்சி மற்றும் ஆட்சி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சட்ட இளங்கலைத்துறையில் முதல் வகுப்பில் கௌரவப்பட்டம் பெற்று, ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற பேராசிரியர் பீரிஸ் 'டெயிலி மிரர்' (*29.01.2026*) பத்திரிகையுடனான பேட்டியில் தனது கருத்துகளைத் தெரிவித்தார்:

**கேள்வி:** இலங்கையின் *70* ஆண்டுகால வரலாற்றில் முதல்முறையாக வலதுசாரிக் கட்சிகளை முற்றிலுமாக நிராகரித்து ஒரு இடதுசாரி அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது. இந்த இடத்தில் வலதுசாரிக் கட்சிகள் எங்கே தவறு செய்தன?

**பதில்:** ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டினதும் முடிவுகள் மாற்றத்திற்கான தெளிவான



விருப்பத்தைச் சுட்டிக்காட்டின என நான் நினைக்கிறேன்.

இருப்பினும் பிரச்சினை என்னவென்றால், தற்போதைய அரசாங்கம் மக்கள் வழங்கிய அந்த ஆணையை அனைத்து முன்னைய அரசாங்கங்களையும் முற்றிலும் நிராகரிப்பதைக் குறிக்கிறது என வியாக்கியானப்படுத்துகின்றனர்.

அதாவது, *1948* முதல் எந்த முன்னேற்றமும் இல்லை என அவர்கள் கூறுகின்றனர். *75* ஆண்டு காலம் முழுமையாக வீணடிக்கப்பட்டது என அவர்கள் கூறுகிறார்கள். அது நிலைமையின் யதார்த்தமான கணிப்பீடு அல்ல.

*1948* ஆம் ஆண்டு இலங்கையை இன்றைய இலங்கையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். *1948*ஆம் ஆண்டு ஆயுள் காலம் என்ன? இன்றைய ஆயுள் காலம் என்ன? *1948*ஆம் ஆண்டு எத்தனை பாடசாலைகள் இருந்தன? இன்று எத்தனை பாடசாலைகள் உள்ளன? *1948*இல் கிராமப்புற பின்னணியைச் சேர்ந்த எத்தனை பேர் பல்கலைக்கழகத்தில் சேர முடிந்தது?

தனிநபர் வருமானம் உயர்ந்துள்ளது. *1948* இல் இருந்ததைவிட மக்கள் மிகச் சிறந்த வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். மிகவும் வெளிப்படையான மாற்றங்கள் சுகாதாரம் மற்றும் கல்வியில் உள்ளன.

நிச்சயமாக நல்லதல்லாதவற்றை நீக்குங்கள். அதுவும் *100* வீதம் சாதிக்கக்கூடிய ஒன்றல்ல. ஆனால் அதை அடைய நீங்கள் முயற்சிக்க வேண்டும்.

**கேள்வி:** அரசாங்கத்தில் உள்ளவர்களின் முதிர்ச்சியின்மை இதற்கு ஓரளவு காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்: ஆம், அது இயற்கையானது. உலகில் எந்தவொரு வேலையிலும் வெற்றிபெற பயிற்சி தேவை என்று நான் நம்புகிறேன். இது யாரையும் விமர்சிப்பதற்காக அல்ல, அது வாழ்க்கையின் உண்மை. ஆனால் அது இல்லை. அது இப்போது நடக்கும் பல விடயங்களில் வெளிப்படுகிறது.

உதாரணமாக, நீங்கள் கல்விச் சீர்திருத்தங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், இதை ஒரு கட்சியின் சாதனையாகக் காட்டி, அனைத்துப் புகழையும் பெற வேண்டும் என ஆசைப்படுகிறார்கள். ஆனால் அது வேலை செய்யாது. நீங்கள் முதலில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் ஆலோசிக்க வேண்டும். எல்லாத் தரப்பினரிடமிருந்தும் உள்ளீடுகள் உங்களிடம் இருக்க வேண்டும். எனவே, அது அடிப்படையில் தவறாகி விட்டது. இது வெறும் அனுபவமின்மை மட்டுமல்ல, ஆலோசனை செய்வதில் உள்ள தயக்கம்.

**கேள்வி:** *2020*ஆம் ஆண்டு அரசாங்கத்தில் நீங்கள் கல்வி அமைச்சராகவும் இருந்தீர்கள். அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்:** சந்தேகம் இல்லை. நாட்டிற்கு கல்விச் சீர்திருத்தம் தேவை. ஆனால் அது ஒரு முழுமையான செயல்முறையாக இருக்க வேண்டும். முறையாக சிந்திக்கப்பட வேண்டும்.

தற்போதைய பிரச்சினை 6ஆம் வகுப்புக்கான தொகுதி பற்றியது. இது மிகவும் உணர்ச்சிபூர்வமான பிரச்சினை. அதனால் கல்வி சீர்திருத்தங்கள் பற்றிய விவாதத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஆனால் மிக அடிப்படையான விடயங்கள் உள்ளன.

நமது நாட்டில் எத்தனை பாடசாலைகளில் இணையத்தள இணைப்பு உள்ளது? எத்தனை பாடசாலைகளில் கணனி வசதிகள் உள்ளன? ஆசிரியர் பயிற்சி மையங்கள் கூட போதுமான அளவு உள்ளனவா?

எனவே, இவை அனைத்தும் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம். அதன் பிறகு சீர்திருத்தங்கள் நடக்க வேண்டும். இல்லையெனில், பதிலாக ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதை நீங்கள் காண நேரிடும். எனவே, நீங்கள் செயல்முறையை ஒட்டுமொத்தமாக மிதிப்பீடு செய்ய வேண்டும்.

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்து கொண்ட உடன்படிக்கையை இந்த அரசாங்கமும் பின்பற்றுகிறது. நாம் அப்படித்தான் செல்ல வேண்டுமா?

**பதில்:** இல்லை. வாக்குறுதிக்கும் வழங்கலுக்கும் இடையிலான இடைவெளிதான் அடிப்படைப் பிரச்சினை. நான் முன்பு குறிப்பிட்டது போல், இந்த அரசாங்கம் முழுமையான மாற்றத்திற்காகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆனால், அவர்கள் அவ்வாறு செயல்படுவதற்குப் பதிலாக, ஒரு துளி வித்தியாசமும் இல்லாமல் ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதாரக் கொள்கைகளைத்தான் தொடர்கிறார்கள்.

ஜே.வி.பி. எதிர்க்கட்சியில் இருந்தபோது, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நீக்க வேண்டும் என்றார்கள். ஆனால் நடந்தது என்ன? ரணில் விக்கிரமசிங்க நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தத்தை அப்படியே தொடர்கிறார்கள். உண்மையில் இவர்கள்தான் அசல் வலதுசாரிகள்.

டித்வா சூறாவளி பேரழிவைத் தொடர்ந்து, உலகின் 50 இற்கும் மேற்பட்ட நாடுகள், இந்த முன்னோடியில்லாத பேரழிவைக் கருத்தில் கொண்டு, “நீங்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்” எனக் கூறின. ஆனால் அரசாங்கம் இது சம்பந்தமாக ஏதாவது செய்கிறதா? இல்லை.

**கேள்வி:** நீங்கள் நீதியமைச்சராகவும் இருந்துள்ளீர்கள். இந்த அரசாங்கம் நீதித்துறை மற்றும் ஜனநாயகத்தின் பிற பிரிவுகள் மீது தலையிடுவதாகக் குற்றம் சாட்டியுள்ளீர்கள். அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில்:** தற்போதைய சில பிரச்சினைகளை எடுத்துப் பாருங்கள். சட்டமா அதிபர் செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட செயல்பாடு உள்ளது. ஒரு வழக்கைத் தொடர்வதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கின்றனவா எனத் தீர்மானிப்பது சட்டமா அதிபர்தான். அவர் ஒரு சுயாதீனமான மனதைக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் சட்டமா அதிபர் மீது செலுத்தப்படும் தேவையற்ற அழுத்தம், அவருக்கு அவமரியாதை செய்வது மட்டுமல்ல, குற்றவியல் நீதி அமைப்பின் தூண்களில் ஒன்றை அழிக்கவும், அமைப்பின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை அழிக்கவும் வழிவகுக்கிறது. சட்டமா அதிபர் தனது விருப்புரிமையைப் பயன்படுத்துவதைத் தீர்மானிக்கும் அரசியல் பரிசீலனைகளை நீங்கள் கொண்டிருக்க முடியாது.

வேறு சில விடயங்களும் நடக்கின்றன. அதாவது, நீதி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளராக உயர் நீதிமன்ற நீதிபதியை நியமிப்பது தவறு. இவை அனைத்தும் சட்டத்தின் ஆட்சிக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் விடயங்கள்.

நீதிபதிகளின் பதவி உயர்வு தொடர்பான சர்ச்சையை எடுத்துக் கொள்ளுங்கள். நீதிபதிகள் பதவி உயர்வு தொடர்பான குறிப்பிட்ட சூழலை கருத்தில் கொண்டு ஒரு தேர்வுக்குழுவை அமைக்கக் கோரி நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. நீதித்துறை சேவை ஆணையம் நீதித்துறை அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது என்பதாலும், அந்த நீதித்துறை அதிகாரத்தை நாடாளுமன்றம் மீற முடியாது என்பதாலும், சபாநாயகர் அதை அனுமதிக்கவில்லை. நீதித்துறை சேவை ஆணையம் நீதித்துறை அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை என்பதால் அது முற்றிலும் தவறானது.

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு கட்சி ஆட்சியை நோக்கி நகர்கின்றது என்ற குற்றச்சாட்டுகள் உள்ளது. அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அது மிகவும் ஆபத்தான நிலை. ஓர் அரசாங்கம் குறிப்பிட்ட காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அந்த அரசாங்க அதிகாரங்கள் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் பொது நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். பின்னர் நீங்கள் மக்களிடம் சென்று அந்த ஆணையை புதுப்பிக்கக் கேட்க வேண்டும். ஜனநாயக நிறுவனங்கள் மீதான எந்தவொரு தாக்குதலும் ஜனநாயக செயல்முறையின் வேரையே தாக்குகிறது.

**கேள்வி:** 2004ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க அரசும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போது, நீங்கள் அரசாங்கத்தின் சார்பாக தலைமைப் பேச்சாளராக இருந்தீர்கள். அப்போது விடுதலைப் புலிகள் வித்தியாசமாகச் செயல்பட்டிருந்தால், தமிழ் மக்களின் எதிர்காலம் வேறு மாதிரியாக இருந்திருக்குமா?

**பதில்:** அடிப்படைப் பிரச்சினை என்னவென்றால், விடுதலைப் புலிகள் தங்களது இராணுவ வலிமையை வெல்ல முடியாதது எனக் கருதினர். எனவே, எந்த விட்டுக்கொடுப்புகளையும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதினர். ஆனால் அவர்கள் இடைக்கால சுயாட்சி அதிகாரத்தில் மிகவும் ஆர்வமாக இருந்தனர். ஏனென்றால், அவர்கள் நடைமுறையில் பெற்ற அதிகாரத்தை சட்டபூர்வமாக்க விரும்பினர். அதற்கு அப்பால் அவர்கள் அரசியல் தீர்வில் அக்கறை காட்டவில்லை.

எனவே, 2009 இல் போர் முடிவுக்கு வந்தது. ஆனால் அதன் மூலம் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டது என்று சொல்ல முடியாது. எனவே, அந்தக் கட்டத்தில் இருந்து நாம் முன்னேற வேண்டும்.

**கேள்வி:** இனப் பிரச்சினைக்கு ஒரு நீண்டகாலத் தீர்வைக் கொண்டுவர, நமக்கு இன்னமும் அதிகாரப் பகிர்வு தேவையென்று நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** பாருங்கள், 13ஆவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும். மாகாண சபைத் தேர்தல்கள் 13 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. மாகாண மட்டத்தில் செலவிடப்பட வேண்டிய அனைத்துப் பணமும் ஆளுநரின் சொந்த விருப்பப்படி இருப்பதற்கான காரணம் என்ன? சம்பந்தப்பட்ட தொகைகள் மிகப் பெரியவை. ஆளுநர் ஜனாதிபதியின் பிரதிநிதி. அந்த நிதி எந்தெந்தத் திட்டங்களுக்கு செலவழிப்பதென்பதை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே தீர்மானிக்க வேண்டும். ஆனால், இப்பொழுது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியாவது எந்தவொரு சபையிலும் இல்லை.

தேர்தல் நடத்தப்படாமைக்கு முறைமை குறைபாடுடையது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் நீங்கள் முறைமையை மாற்ற வேண்டும். ஆனால் அதற்காக நீங்கள் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது.

நாடாளுமன்ற தேர்தல் முறையும் குறைபாடுடையது. அதற்காக நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தாமல் இருக்க முடியாது.

எனவே, தற்போதுள்ள அமைப்பின் கீழ் சரியான நேரத்தில் தேர்தல்களை நடத்தி, அதன் பிறகு அந்த அமைப்பை மேம்படுத்துவதில் ஈடுபடுவதே சரியான முறை.

பேட்டி கண்டவர்: Susitha Fernando

# சீனாவில் மருத்துவமும் பொது சுகாதாரமும்

உலகையே உலுக்கிய கொவிட் – 19 பெருந்தொற்றுக் காலத்தில் மனித உயிர்களைக் காப்பதில் ஒரு அரசு எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு மக்கள் சீனம் மகத்தான முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

சீனத்தின் மருத்துவ அறிவியல் மற்றும் "தேசப்பற்று மிக்க சுகாதாரப் பிரச்சாரம்" (Patriotic Health Campaign) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடு, நவீன மருத்துவ வரலாற்றில் ஒரு வியக்கத்தக்க சாதனையாகும்.

வதந்திகளும், அறிவியல் போக்கும் கொவிட் – 19 பெருந்தொற்று பரவிய காலத்தில் நிலவிய சூழ்நிலையில், உலகெங்கிலும் உள்ள வலதுசாரி மற்றும் கம்யூனிச எதிர்ப்பு அமைப்புகள் சீன எதிர்பபு வாந்திகளையும், "சைனோ போபியா" (Sino Phobia) என்ற சீனவெறுப்பையும் கட்டவிழ்த்துவிட்டன.

அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் வைரசைக் கொல்ல 'ப்ளீச்' விச ஊசிகளைப் பரிந்துரைத்ததும், பிரேசிலின் போல்சானரோ முகக்கவசம் அணிவதைக் கிண்டல் செய்ததோடு, "கம்யூனிஸ்ட்டுகளைச் சுட்டுக் கொல்ல வேண்டும்" எனக் கூச்சலிட்டதும், மக்களைத் திகைக்க வைத்தன. இந்தியாவில், நரேந்திர மோடியின் ஆதரவாளர்கள் மாட்டுச் சாணம் மற்றும் அதன் சிறுநீரைக் குடித்தால், கொவிட் குணமாகும் என அறிவுபூர்வமற்ற கருத்துகளைப் பிரச்சாரம் செய்தனர்.

இத்தகைய பிற்போக்குத்தனமான அணுகுமுறைகளால் இந்த நாடுகளில் கொவிட் மரணங்கள் அதிகளவில் நிகழ்ந்தன. மருத்துவ அறிவியலுக்கு எதிராகச் செயல்பட்ட நாடுகளில்தான் உயிரிழப்புகள் கோரமாக இருந்தன. அமெரிக்காவிலும், பிரேசிலிலும் தலா 7 இலட்சத்திற்கும் அதிகமான மரணங்கள் நிகழ்ந்தன. இந்தியாவில் மரணித்தவர்கள் தொகை 5.33 இலட்சம் என அதிகாரபூர்வமாகச் சொல்லப்பட்டாலும், பிராணவாயு தட்டுப்பாட்டால் மக்கள் கொத்துக் கொத்தாக மடிந்ததும், அவர்களை அடக்கம் செய்ய போதிய இடமில்லாமல் கங்கையில் சடலங்களைத் தூக்கிப் போட்டதும் நடந்தது.



அதே நேரத்தில், 140 கோடி மக்கள் தொகை கொண்ட சீனாவில், உயிரிழப்புகள் சுமார் 1,22,398 அளவிலேயே இருந்தன. சீனாவின் இந்த வெற்றிக்கு அதன் வலுவான மையப்படுத்தப்பட்ட ஜனநாயகமும் (Centralised Democracy), கூட்டுச் செயல்பாடும், சமூக இணக்கமுமே அடிப்படையாக அமைந்தன என, 'தி லான்செட்' (The Lancet) மற்றும் 'வைலி' (Wiley) போன்ற உலகப் புகழ்பெற்ற அமெரிக்க ஆய்வு நிறுவனங்கள் பாராட்டியுள்ளன.

2020 பெப்ருவரியில் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் அறிவித்த "மக்கள் போர்" என்பது சுகாதாரப் பராமரிப்பை வெறும் மருத்துவச் சேவையாக பார்க்காமல், ஒரு தேசியக் கடமையாக மாற்றியது. வூஹானில் 1,000 படுக்கைகள் கொண்ட 'ஹூசென் ஸான்' மற்றும் 1,300 படுக்கைகள் கொண்ட 'லீ ஸென்சான்' மருத்துவ மனைகள் ஒவ்வொன்றையும் வெறுமனே 10 நாட்களில் கட்டி முடித்தது முன்னொரு போதும் நிகழாத சாதனைகளாகும்.

சீனா தனது முழு அரசு இயந்திரத்தையும் பயன்படுத்தி பிராந்தியங்களுக்கு இடையேயான வளங்களைத் துரிதமாகத் திரட்டியது. மேலிருந்து கீழ் அதிகாரங்கள் சீராகப் பகிரப்பட்டு, ஒவ்வொரு வீதியிலும் சுகாதாரப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. சீனாவின் மூன்று அடுக்கு மருத்துவக் கட்டமைப்பு அடிமட்ட அளவில் மிகவும் வலிமையாக உள்ளது.

உள்ளுர்வாசிகளின் அடிப்படைத் தேவைகள், நாள்பட்ட நோய் மேலாண்மை மற்றும் சுகாதாரக் கல்வி என்பனவற்றை, நாடு முழுவதுமுள்ள 90 சத வீதமான மக்கள் 15 நிமிட பயண நேரத்தில் பெறக்கூடியதாக இருக்கிறது.

பக்கவாதம், கடுமையான காயங்கள், மகப்பேறு சேவைகள், சிக்கலான சிகிச்சைகள் என்பனவற்றை மக்கள் சீராகப் பெறுகிறார்கள்.

சீனாவில் தற்போது 9,80,000 அடிமட்ட மருத்துவ நிறுவனங்கள் உள்ளன. இவை நாட்டின் மொத்த மருத்துவத் தேவைகளில் 52 சத வீதத்தைக் கையாளுகின்றன. உலகச் சராசரியான 1,000 பேருக்கு 1.7 மருத்துவர்கள் என்பதை விட, சீனாவில் 1,000 பேருக்கு 3.04 மருத்துவர்கள் உள்ளனர். அத்துடன்,49.5 இலட்சம் சமூக அளவிலான சுகாதாரப் பணியாளர்களும், 11 இலட்சம் கிராமப்புற மருத்துவர்களும் உள்ளனர்.

சீனாவின் சோசலிச அடிப்படையிலான மருத்துவத் தொழில்நுட்பம் இன்று உலகின் உச்சத்தைத் தொட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் நோய்களைக் கண்டறிதல், தொலைதூரக் கிராமங்களுக்கு 'ரெலி–மெடிசின்' மூலம் உயர் சிகிச்சை அளித்தல் போன்றவற்றில் சீனா உலகின் முன்னோடியாக உள்ளது.

2024 ஆம் ஆண்டுப் புள்ளிவிபரத்தின்படி, சீனாவின் மொத்தச் சுகாதாரச் செலவு 9.09 ரில்லியன் யுவான் (1.27 ரில்லியன் டொலர்கள்) ஆகும். இது சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 6.7 வீதமாகும். சீனாவுடன் ஒப்பிடுகையில் இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சத வீதத்தை மட்டுமே 2024 இல் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கியுள்ளது.

அது மட்டுமின்றி, சீனா தனது தடுப்பூசிகளை வணிக நோக்கம் இன்றி, "உலகளாவிய பொதுப்பொருள்" (Global Public Good) என அறிவித்து, வளரும் நாடுகளுக்கு வழங்கியது. இது முதலாளித்துவ வணிக நோக்கத்தில் செயல்படும் அமெரிக்காவை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது.

சுமார் 130 இலட்சம் மருத்துவப் பணியாளர்களையும், 10 இலட்சத்திற்கும் அதிகமான சுகாதார நிறுவனங்களையும் கொண்டுள்ள சீனம், சுகாதாரப் பராமரிப்பை ஒரு இலாபகரமான வணிகமாகப் பார்க்காமல் உன்னத இலட்சியமாகக் கருதுகிறது. அமெரிக்காவின் உயிரி தொழில்நுட்ப தகவல் தேசிய மையம் (NCBI) குறிப்பிட்டது போல, சீனாவின் "முதன்மை சுகாதாரப் பராமரிப்பு" முறை உலக நாடுகளுக்கு மதிப்புமிக்க அனுபவத்தை வழங்கி வருகிறது.

தெளிவாகத் தெரிவது ஒன்று மட்டுமே: சோசலிசமே மனித குலத்தின் ஆரோக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உன்னதத் தீர்வாகும்.

–தீக்கதிர்

# பாங்கொக்கின் வளர்ச்சியைக் கண்ட பின்னரே கருணா புலிகளிலிருந்து பிரிந்தார்

## -எரிக் சொல்ஹெய்ம்

சமாதானச் பேச்சுவார்த்தைகளின் (2002–2006) போது சர்வதேச அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், அந்தச் செயல்முறையின் பின்னடைவுகள் குறித்து 'டெய்லி மிரர்' (Daily Mirror, 27.01.2026) பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்.

**கேள்வி: சமாதான அனுசரணையாளராக இருந்த காலம் முதல் நீங்கள் இலங்கைக்கு அடிக்கடி வந்து செல்பவர். இந்த முறை உங்கள் வருகையின் நோக்கம் என்ன?**

பழைய நண்பர்களுடனான நட்பைப் பேணவும், புதிய நண்பர்களைச் சந்திக்கவுமே வந்தேன். அத்துடன் சில முக்கிய கூட்டங்களிலும் கலந்து கொள்ளவுள்ளேன்.

சிகிரியாவில் பசுமை சுற்றுலா (Green Tourism) தொடர்பான கூட்டமொன்றில் பங்கேற்கவுள்ளேன். இலங்கை ஒரு சிறந்த சுற்றுலாத் தளம், அதனை எவ்வாறு இன்னும் பசுமையானதாக மாற்றுவது என்பது குறித்து அங்கு ஆலோசிப்போம். இந்தியப் பெருங்கடலில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த சிந்தனையாளர் கூட்டத்தில் நான் உரையாற்ற உள்ளேன். மேலும், எனது பழைய நண்பர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்களின் சமாதானச் செயல்முறை குறித்த நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்துகொள்வேன்.

**கேள்வி: பேராசிரியர் பீரிஸின் நூல் ஏற்கனவே வெளியாகிவிட்டது. நீங்கள் அதை வாசித்தீர்களா?**

நிச்சயமாக, நான் அதனை முழுமையாக வாசித்துவிட்டேன்.

**கேள்வி: அந்த நூல் குறித்தும், சமாதானச் செயல்முறை குறித்தும் உங்கள் கருத்து என்ன?**

சமாதானச் செயல்முறையில் இருந்த சகல சிக்கல்களையும் அந்த நூல் மிகச்சிறப்பாக விவரிக்கின்றது.

அந்த நேரத்தில், தெற்கில் இருந்த முக்கிய அரசியல் சக்திகளுக்கிடையிலான (SLFP மற்றும் UNP) ஒத்துழைப்பு இல்லாமை ஒரு பெரிய தடையாக இருந்தது என்பதை அது சுட்டிக்காட்டுகின்றது. அதேபோல்,



கடலில் நிலவிய சகல சிக்கல்களையும் அது சொல்கின்றது. ஆயுதக் கடத்தல்கள் இடம்பெற்றன. இது கடற்படையினருடனான மோதல்களை உருவாக்கி, சிக்கல்களைத் தோற்றுவித்தது.

பொருளாதாரக் கொள்கையுடன் சமாதானச் செயல்முறையை ஒருங்கிணைப்பதில் இருந்த சிரமங்களையும் அது கூறுகின்றது. இது மக்களுக்குக் குறுகிய காலத் துன்பத்தைத் தந்தது. மக்கள் அதனை சமாதானச் செயல்முறையின் விளைவாகவே பார்த்தார்கள். ஆனால், இந்த நூல் ஒரு கல்விசார் படைப்பு (Academic work) போல இருப்பதை விட, ஓர் அரசியல்வாதியின் நேரடி அனுபவப் பதிவாக இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என நான் கருதுகிறேன்.

**கேள்வி: தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) நேர்மைத்தன்மையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

உண்மையில் இது ஒரு நல்ல கேள்வி, ஆனால் இதற்கு ஒரு நேரடிப் பதில் கிடையாது. புலிகள் தமது பலத்தின் உச்சியில் இருந்தபோதே சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார்கள்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மீது புலிகள் தாக்குதல் நடத்தி, இலங்கைப் பொருளாதாரத்தை முடக்கிய காலகட்டம் அது. புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றிய பின்னர், யாழ்ப்பாணக் குடாநாட்டை முழுமையாகக் கைப்பற்றும் நிலையில் அவர்கள் இருந்தார்கள். எனவே, புலிகள் அதிகபட்ச இராணுவ, அரசியல் பலங்கொண்டவர்களாக இருந்த நேரத்திலேயே பேச்சுவார்தைக்கு வந்தார்கள்.

எனவே, அவர்கள் பலவீனமாக இருந்தபோது பேச்சுவார்த்தைக்கு வரவில்லை. மாறாக, பலமாக இருந்தபோதே வந்தார்கள். அதனால் அவர்கள் நேர்மையாகவே இருந்தார்கள் என்று நான் நம்புகிறேன். இருப்பினும், திரு. பிரபாகரன் அவர்களுக்கு ஒரு சமரசத்திற்கு (Compromise) வருவதில் பெரும் சிக்கல் இருந்தது. சமாதானம் என்பது விட்டுக்கொடுப்புகளால் மட்டுமே சாத்தியம். ஆனால் அவர் அனைத்தையும் தனது வழியிலேயே விரும்பினார். சமாதான முன்னெடுப்பில் நீங்கள் அதனைப் பெற முடியாது.

மேலும், அவர் இராணுவ வழிகளில் எந்தளவு தூரம் வர முடியும் என்பதையும் அவர் புரிந்து கொள்ளவில்லை. அனைத்தையும் இராணுவ ரீதியாகவே அணுகும் போக்கும் அவரிடம் இருந்தது. ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால், அரசியல் தீர்வைத் தேடுவதை விட அவர்களைக் கொல்வதே சிறந்தது என்று அவர் நினைத்தார். அரசியலை விட இராணுவ ரீதியான தீர்வுகளுக்கே அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

**கேள்வி: விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) புலிகளிடமிருந்து பிரிந்ததற்கான காரணம் உங்களுக்குத் தெரியுமா? அது சமாதானச் செயல்முறையின் நேரடி விளைவு என்று சிலர் கூறுகிறார்கள். அவர் வெளிநாடுகளுக்குச் சென்றபோது உலகைப் பார்த்து ஈர்க்கப்பட்டார் என்று வேறு சிலர் சொல்கிறார்கள். உண்மையான காரணம் என்ன?**

அந்த இரண்டாவது காரணத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குத் தெரிந்தவரை கருணா அதற்கு முன்னர் வடக்கு, கிழக்கைத் தாண்டி வெளியே சென்றதில்லை.

அவர் பாங்கொக்கிற்கு (Bangkok) வந்து, அங்கிருந்த நவீன வாழ்க்கை முறையையும், தாய்லாந்தின் அதிவேக வளர்ச்சியையும் கண்டபோது அவர் மிகவும் ஈர்க்கப்பட்டார் என்று நான் நினைக்கிறேன். இலங்கையும் மாற வேண்டும் என்பதை அவர்

புரிந்துகொண்டார்.

ஆனால், உண்மையில், இதற்கு கருணா அவர்களால் மட்டுமே சரியான பதிலைச் சொல்ல முடியும்.

**கேள்வி: சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக உலக நாடுகளின் தலைநகரங்களைத் தேர்ந்தெடுத்ததற்கு குறிப்பான காரணம் ஏதேனும் உண்டா?**

நாங்கள் தாய்லாந்தை தெரிவு செய்ததுக்கு எளிமையான காரணம், அது அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இணக்கமானதொரு இடமாக இருந்தது. இது கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் தாய்லாந்து ஒரு பௌத்த நாடு என்பதால் புலிகள் தயங்குவார்கள் என நான் நினைத்தேன், ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

மற்றொரு காரணம், காலநிலை, சூழல் மற்றும் உணவு. தாய்லாந்து இலங்கையர்களுக்குப் பரிச்சயமானது. ஐரோப்பா மிகவும் குளிரானது. நோர்வேயில் நாங்கள் நடத்திய சில கூட்டங்கள் எனக்கு இன்னும் நினைவிருக்கின்றது, அங்கு சில இலங்கை பிரதிநிதிகள் பனியையும், வழுக்கும் உறைபனியையும் கண்டு முற்றிலும் பயந்தார்கள்.

அவர்கள் ஒரு புலியைப் பார்த்துப் பயப்படுவது போலப் பயந்தார்கள். பெரும்பாலான பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தில் நடந்தன.

ஜப்பான், ஜேர்மனி மற்றும் நோர்வே ஆகிய நாடுகளிலும் நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். சமாதான முன்னெடுப்புகளின் செய்தியை வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதென்ற பிரதான அரசியல் காரணங்களுக்காகவே அவ்வாறு செய்தோம். தாய்லாந்தே முக்கிய இடமாக இருந்தது. அதற்கு காலநிலை மற்றும் உணவு முக்கிய காரணம். பிரதிநிதிகள் அங்கு சௌகரியத்தை உணர்ந்தனர்.

**கேள்வி: புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையே முரண்பாடுகள் இருந்தது உங்களுக்குத் தெரியுமா?**

பாலசிங்கம் எப்போதாவது புலிகளிலிருந்து பிரிந்திருப்பார் என நான் நினைக்கவில்லை. ஆனால் அவர்களுக்குள் பெரிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. உதாரணமாக, ராஜீவ் காந்தி கொலைக்காக இந்திய ஊடகங்களிடம் பாலசிங்கம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். அதற்கு பிரபாகரனிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

சமாதானத் தீர்வாக 'சமஷ்டி' (Federalism) முறையை பாலசிங்கம் ஏற்றுக்கொண்டார், ஆனால் பிரபாகரனுக்கு அது ஏற்புடையதாக இருக்கவில்லை. அவர்களிடையே தெளிவான கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனாலும் அவர்கள் இருவரும் ஒரு வயதான தம்பதியினரைப் போல அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் ஒன்று சேர்ந்து இருந்தனர்.

அவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளும்போது, ஒருவருடன் ஒருவர் நீண்ட காலம் பேச மாட்டார்கள். அவர்களிடையேயான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருக்கும். புலிகளின் அப்போதைய அரசியல் போக்கினால், அவர்கள் நிச்சயம் தோற்றுப்போவார்கள் என்பதை பாலசிங்கம் உணர்ந்திருந்தார். கிழக்கு மாகாணத்தை புலிகள் இழப்பார்கள், இதே பாதையில் போனால் வடக்கைக்கூட இழப்பார்கள் என அவர் என்னிடம் கூறினார். பிரபாகரன் அடிப்படையில் ஓர் இராணுவ மனிதர், பாலசிங்கம் அடிப்படையில் ஓர் அரசியல் மனிதர். அங்கேதான் மோதல் ஏற்பட்டது.

**கேள்வி: பிரபாகரனின் இத்தகைய பிடிவாத குணத்தால், நிரந்தர தீர்வுக்கான சாத்தியம் ஏதாவது இருந்ததா?**

சமாதானச் செயல்முறையில் இரண்டு முக்கிய தடைகள் இருந்தன என நான் நினைக்கிறேன். ஒன்று தெற்கில் இருந்த ஒற்றுமையின்மை, மற்றொன்று பிரபாகரனின் நெகிழ்வுத்தன்மையற்ற (Lack of flexibility) குணம். பிரபாகரனது நெகிழ்வுத்தன்மை இல்லாமை, அரசியல் தீர்வுகளை விட இராணுவத்திற்கு முன்னுரிமை அளித்தது. அமைதியான முடிவுக்கு ஒரு வாய்ப்பு இருப்பதாக நான் இன்னமும் நம்பினேன். இரண்டு முக்கிய வாய்ப்புகள் வீணடிக்கப்பட்டன. 2002 இல் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கியபோது, மகத்தான ஆதரவு இருந்தது. அனைவரும் சமாதான முன்னெடுப்புகளை ஆதரித்தனர்.

இலங்கையின் அனைத்து இன மக்களிடமும் 90 சதவீத ஆதரவு இருந்தது. இரண்டு வருடங்களாக கொலைகள் எதுவும் நடக்கவில்லை. அந்த வகையான வாய்ப்பு (Momentum) பறிபோனது.

அடுத்த வாய்ப்பு 2004 ஆம் ஆண்டு மார்கழியில் ஏற்பட்ட சுனாமிப் பேரிடர். சுனாமிக்குப் பிறகு ஒருவித தேசிய உணர்வு ஏற்பட்டது.

அப்போது இராணுவம் புலிகளுக்கும், புலிகள் சிங்கள மக்களுக்கும் உதவினார்கள். சுனாமியின் பின்னர் ஒரு தேசிய ஒற்றுமை உருவானது. ஆனால் அதிகாரத்துவம் (Bureaucracy) மற்றும் தாமதங்களால் அந்த வாய்ப்பும் நழுவிப்போனது.

**கேள்வி: இன்றைய நிலையில் இலங்கையில் சிறுபான்மையினரின் நிலை குறித்து உங்கள் கருத்து என்ன?**

தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்த இலங்கை இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இருப்பினும், நிட்சயமாக பொருளாதார வளர்ச்சியும் இதற்கு உதவும்.

யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் பொருளாதார மேன்பாடு ஏற்பட்டால் அது மாற்றத்தை உண்டாக்கும். மக்கள் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டையும் விரும்புகிறார்கள். யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் இலங்கையின் கல்வி மையமாக இருந்தது.

ஆனால் இலங்கையை விட்டு தமிழர்கள் பெருமளவில் வெளியேறியதால், யாழ்ப்பாணம் இன்று ஏனைய நகரங்களை விட வளர்ச்சி குன்றிக் காணப்படுகிறது.

**கேள்வி: சமாதானச் செயல்முறை தொடர்ந்திருந்தால், புலிகள் இயக்கம் கருணா தரப்பு போலப் பல குழுக்களாகப் பிரிந்து பலவீனப்பட்டிருக்கும் என நம்புகிறீர்களா?**

சமாதானச் செயல்முறை வெற்றி பெற்றிருந்தால், புலிகள் இயக்கம் அடிப்படையான இராணுவ இயக்கத்திலிருந்து அரசியல் கட்சியாக அல்லது அரசியல் குழுவாக மாற்றம் பெற்றிருக்கும்.

அது ஒரு கடினமான மற்றும் வலிமிகுந்த மாற்றமாக இருந்திருக்கும். அமைதி நிலவும் போது ஒரு நாட்டில் நீண்ட காலத்திற்குப் பெரிய தனிப்பட்ட இராணுவம் இருக்க முடியாது.

**கேள்வி: காலநிலை மாற்றம் பற்றிப் பேசுவோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகராக நீங்கள் இருந்தீர்கள். சர்வதேச காலநிலை மாற்றப் பல்கலைக்கழகம் (Climate Change University) அமைப்பது பற்றிப் பேசப்பட்டது. அத்தகையதொரு பல்கலைக்கழகம் இலங்கைக்கு எவ்வளவு பொருத்தமானது?**

தனியான ஒரு பல்கலைக்கழகம் தேவையா என்பதில் எனக்குச் சந்தேகம் உண்டு. ஏற்கனவே உள்ள கொழும்பு அல்லது பேராதனைப் பல்கலைக்கழகங்களில் காலநிலை மாற்றத்திற்கான துறைகளை வலுப்படுத்துவதே சிறந்தது.

புதிய பல்கலைக்கழகம் அமைப்பதில் கட்டிடம், ஆட்களைத் திரட்டுவது எனப் பல வேலைகள் உள்ளன.

அதற்குப் பதிலாக ஏற்கனவே இருக்கும் பல்கலைக்கழகத்தின் முக்கியமானதொரு ஒருங்கிணைந்த பகுதியாக காலநிலைக் கல்வியை மாற்றுவது சிறந்தது.

**கேள்வி: அத்தகையதொரு பல்கலைக்கழகம் தொடர்பில் கவனம் செலுத்துவதையிட்டு அப்போதைய அரசு எந்த அளவுக்கு முன்னேறியது?**

இது முக்கியமாக ஒரு நல்ல யோசனையாக இருந்தது. அது உண்மையில் நிறைவேறவில்லை. அது ஒரு யோசனையான மட்டுமே இருந்தது.

புத்திஜீவித்தனமான வெளிப்பாடு, பல்கலைக்கழகங்களின் கருத்துக்கள், எதிர்காலத்தில் சூறாவளி மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு இலங்கை எவ்வாறு சிறந்த முறையில் தயார் செய்ய முடியும் என்பது பற்றிய யோசனைகள். மிக முக்கியமானவை. கட்டிடங்களை நிர்மாணிப்பதில் நேரத்தை செலவிடக்கூடாது. மற்ற பல்கலைக்கழகங்களில் இருந்து தேவையான ஊழியர்களை நியமிக்கலாம்.

அதனால்தான் நான் இதனை கடுமையாக பரிந்துரைக்கிறேன். காலநிலைக் கல்வி ஏற்கனவே இருக்கும் ஒரு பல்கலைக்கழகத்தில் ஓர் அலகு,



ஒரு துறையாக இருக்கட்டும்! பின்னர், நீங்கள் கட்டிடங்களை கட்ட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் புதிய ஊழியர்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

**கேள்வி: இலங்கையின் பசுமைப் பொருளாதாரத்தின் (Green Economy) சாத்தியக்கூறுகள் எப்படி உள்ளன?**

இலங்கைக்கு இதில் அபாரமான வாய்ப்புகள் உள்ளன. ஒரு வெப்பமண்டல நாடு என்பதால் சூரிய ஒளி மற்றும் காற்றலைச் சக்தி (Solar and Wind energy) மூலம் அதிக மின்சாரம் தயாரிக்க முடியும். காற்றலைகளை கடலிலும் தரையிலும் நிறுவலாம்.

கடந்த ஆண்டு முதல் முறையாக, இந்தியா மற்றும் சீனாவில், நிலக்கரி பயன்பாடு குறைந்தது. இரு நாடுகளின் வரலாற்றில் முதல் முறையாக அவர்கள் நிலக்கரியைக் குறைத்தனர். சூரிய சக்தியில் பாரியளவில் முதலிட்டதே அதற்கு காரணம்.

அடுத்தது சுற்றுலாத் துறை. இதுவே இன்று இலங்கையில் அந்நிய செலவாணியின் முதலாவது ஆதாரமாகும்.

கடற்கரைகள் மற்றும் யானைகளைக் கொண்ட தேசிய பூங்காக்கள், தலதாமாளிகை, போதி மரம் அமைந்துள்ள அனுராதபுரம், சிகிரிய மற்றும் தம்புள்ளை போன்ற அற்புதமான கலாச்சார தளங்கள் இலங்கையில் பார்ப்பதற்கு ஏராளமாக உள்ளன. இது மிக, மிக அழகான இடம்.

மிகச் சிறிய பரப்பிற்குள் அனைத்தும் இருப்பது இலங்கையின் தனிச்சிறப்பு. இந்தியாவில் பார்ப்பதற்கு இன்னும் நிறைய இடங்கள் உள்ளன, ஆனால் இந்தியா கிட்டத்தட்ட ஒரு கண்டம். சீனாவும் அதேபோல கிட்டத்தட்ட ஒரு கண்டமே.

மூன்று, நான்கு மணி நேர பயணத்தில், நீங்கள் இலங்கையில் உள்ள எல்லாப் பாகங்களுக்கும் செல்லலாம். இது முற்றிலும் தனித்துவமானது. ஆனால், எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகள் பசுமைச்சக்தி அடிப்படையிலான தீர்வுகளையே எதிர்பார்ப்பார்கள். நெகிழி (Plastic) இல்லாத கடற்கரைகள், மின்சார வாகனப் போக்குவரத்து, சூழல் நட்பு விடுதிகள் ஆகியவற்றை இலங்கை உருவாக்க வேண்டும்.

இவை அனைத்தும் இலங்கையிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை சூழல் சுற்றுலா எண்ணக்கருவை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

**கேள்வி: இலங்கையின் தற்போதைய நிலை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

இலங்கை நிறைய படிகளைக் கடந்து வருகின்றது. ஆனாலும் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது.

சீனாவில் இப்போது, அனைத்து போக்குவரத்துக்கும் மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டது நீங்கள் அங்குள்ள ஒரு சுற்றுலாத் தலத்திற்குச் சென்றால், சகல பேருந்துகள், கார்கள், ஸ்கூட்டர்கள் மற்றும் நிறைய லொரிகள் கூட மின்சாரமாக இருக்கும். இது மிகவும் அமைதியானது, சத்தம் எதுவும் இல்லை, மாசு இல்லாத சூழ்நிலையை உருவாக்குகின்றது.

இலங்கை இதனை அடைய முயற்சிக்க வேண்டும். இலங்கையை விட மிகவும் வறிய நாடான நேபாளத்தில், புதிய கார்களில் 80 சதவிகிதம், இப்போது மின்சார கார்களாகும்.

**கேள்வி: ஆனால் இந்த பசுமைப் பொருளாதார இலக்குகளை நாங்கள் அடைவதற்கு, எங்களது முதலீட்டு நிலைமையும் மேம்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் முதலீட்டு நிலைமை பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?**

இந்த முதலீடுகளில் பலவற்றிற்கு அதிகம் செலவாகாது. சூரிய சக்தியில் முதலீடு செய்வது ஒரு செலவு அல்ல. சூரிய சக்தி உலகெங்கிலும் மிகவும் மலிவான எரிசக்தியாகும். எனவே, இந்த சூரிய சக்தியை உருவாக்குவதற்கான மனநிலைக்கு மாற வேண்டும்.

**கேள்வி: முந்தைய அரசாங்கம் இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் முதலீடுகளைக் கோரியது. அவர்கள் ஒப்பந்தத்தை முடிவு செய்து, திட்டம் அமுல்படுத்தும் நிலையில் இருந்தது. ஆனால் திடீரென ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிய அரசு இந்த திட்டத்தை இரத்து செய்துள்ளது. இந்த**

**விடயத்தில் கொள்கை நிலைத்தன்மை இல்லாதது நாட்டை எவ்வாறு பாதிக்கும்?**

இலங்கையின் உள்நாட்டு அரசியலில் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆனால் நீங்கள் புதுப்பிக்கத்தக்க சக்திகளை உருவாக்க விரும்பினால், வெளிநாட்டு முதலீடு அதனை மிகவும் எளிதாக்கும் என்பது தெளிவானது.

வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்தவரை இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளே முக்கியமானவை. ஜப்பான், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்தும் முதலீடுகள் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், நீங்கள் வரைபடத்தைப் பார்த்தால், இந்தியா மிக, மிக நெருக்கமான நாடாக உள்ளது என்ற முடிவுக்கே வந்தடைவீர்கள்.

சீனா இப்போது ஆசியாவில் உள்ள ஒவ்வொரு நாட்டுடனும் மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக உள்ளது. முற்றிலும் எல்லா இடங்களிலும் வர்த்தக பங்காளியாக சீனாவே முதலிடத்தில் உள்ளது. பசுமைச்சக்தித் தீர்வுக்கு சீனா இன்றியமையாத நாடு.

என் பார்வையில் அதானி ஓர் அருமையான இந்திய நிறுவனம். குஜராத்தில் அவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள் என்பதை நீங்கள் பார்த்தால், அவர்கள் உலகின் எல்லா இடங்களிலும் மிகப்பெரிய சூரிய சக்தி மற்றும் காற்றாலையை உருவாக்கி வருகின்றனர். இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளிடமிருந்தும் முதலீட்டை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பதை இலங்கை முற்றிலும் கவனிக்க வேண்டும்.

**கேள்வி: ஆனால் போட்டிபோடும் பூகோள அரசியல் நலன்கள் காரணமாக இது மிகவும் கடினமான பணியாக இருக்குமல்லவா?**

இலங்கை என்பது இலங்கையர்களுக்கானது. அது இந்தியாவிற்கோ சீனாவுக்கோ உரியதல்ல.

இலங்கையின் பொருளாதார மற்றும் வெளிநாட்டுக் கொள்கை இரண்டிற்குமான ஒரேயொரு அர்த்தம், இலங்கை முதன்மையானது (Sri Lanka First) என்பதே. சீன முதலீட்டின் மூலம் இலங்கை ஆதாயம் பெற முடியுமானால், இலங்கை 'ஓம்' என்று கூற வேண்டும். இந்தியாவின் முதலீட்டால் நன்மை என்றால் அதற்கும் 'ஓம்' என்று சொல்ல வேண்டும். மேற்கத்தைய நாடுகளிலிருந்து இருந்து கூடுதலான முதலீட்டுடன் இதனை சமநிலைப்படுத்த முடியும். அமெரிக்கா இப்போது இலங்கையை மிகவும் உற்று நோக்கி வருகின்றது.

இலங்கை, அமெரிக்காவிலிருந்து மிக, மிக வெகு தொலைவில் உள்ளது.

**கேள்வி: இந்த முறை உங்கள் இலங்கை விஜயத்தின் போது சில அரசாங்கத் தலைவர்களைச் சந்திப்பீர்களா?**

அதனை நான் எதிர்பார்க்கிறேன். ஆனால் திட்டங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை,

ஆனால் நிட்சயமாக தற்போதைய அரசாங்கத்தைச் சந்திக்க நான் மிகவும் ஆர்வமாக உள்ளேன்.
நான் ஒவ்வொருவரையும் சந்திக்க விரும்புகிறேன்.

**கேள்வி: நீங்கள் இலங்கைக்காக வேலை செய்வதில் அல்லது இலங்கையர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வமாக இருக்கிறீர்கள். என்ன காரணம்?**

நான் இங்கே அதிக காலத்தைச் செலவிட்டுள்ளேன். எனக்கு நிறைய நண்பர்கள் உள்ளனர். இலங்கையை எனது இரண்டாவது வீடாகவே கருதுகிறேன். இது உலகின் மிக அழகான நாடு. நல்ல நட்பு, கடின உழைப்பாளிகளைக் கொண்ட நாடு இது. அவர்களுக்கு என்னால் ஏதேனும் உதவி செய்ய முடிந்தால் நான் மகிழ்ச்சியடைவேன்.

**கேள்வி: கடற்கரைகள், மலைகள் அல்லது உணவு இலங்கையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?**

அனைத்தினதும் கலவைதான். இதுதான் இலங்கையை மீண்டும் தனித்துவமாக்குகிறது. மாத்தறை அல்லது காலி கடற்கரைகளில் இருந்து சில மணிநேரங்களில் மிக அழகான தேசிய பூங்காக்களை அடையலாம். அடுத்த சில மணி நேரங்களில் இலங்கையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்கள் அல்லது கண்டி தலதா மாளிகைக்குச் செல்ல முடியும். ஒரு கடற்கரையில் அமர்ந்து ஒரு பியர் அருந்திக்கொண்டே வாழ்வின் அனைத்து அம்சங்களையும் அனுபவிக்க முடிவதுதான் இலங்கையின் தனித்துவம்.

**கேள்வி: ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்டபோது, நீங்கள் அவருக்கு ஆதரவாக 'X' தளத்தில் பதிவிட்டீர்கள். அதற்கு என்ன காரணம்?**

மிக எளிமையான காரணம், அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மையாகவே இருந்தாலும், அவர் எந்தவிதமான சட்டவிரோதச் செயலையும் செய்யவில்லை என்பதே. தனது தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தின் போது (University of Wolverhampton) பாதுகாப்புச் செலவுகளை அரசு ஏற்றது என்பதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு.

ட்ரம்ப் கோல்ப் விளையாடச் சென்றால், அவருக்கு அமெரிக்க அரசு முழுபாதுகாப்பையும் வழங்குகின்றது. மோடி யோகாசனம் செய்யும்போது, அவருக்கு இந்திய அரசு முழுபாதுகாப்பையும் வழங்குகின்றது. நீங்கள் நாட்டின் தலைவராக இருக்கும்போது, நீங்கள் எதனைச் செய்தாலும் பாதுகாப்பு உங்களுடன் கூடவே இருக்கும்.

நீங்கள் பதவியில் அமர்ந்திருக்கும்போது மட்டுமே, பயங்கரவாதத்திற்கு எதிராக உங்களை பாதுகாக்க முடியாது. தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வமற்ற நடவடிக்கைகளின் போது குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகளிடமிருந்து அரசுத் தலைவர்கள் கட்டாயமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மையாக இருந்தாலும், அவர் செய்தது நோர்வே, அமெரிக்கா அல்லது இந்தியாவில் சட்டவிரோதமானது என்று கருதப்படாது.

பேட்டி கண்டவர்: கெலும் பண்டார (Kelum Bandara)

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

'மூலதனம்' உள்ளிட்ட படைப்புகள் நூலக ஆய்வுகளின் விளைவே. இதனை முன்வைத்தே, கன்னிமாரா நூலகத்தில் கார்ல் மார்க்ஸ் சிலையை நிறுவ வேண்டும் என்ற மார்க்சிஸ்ட் கட்சியின் கோரிக்கையை ஏற்றுத் தமிழக அரசு அங்கே சிலையை நிறுவியுள்ளது. லெனின் போன்ற மாபெரும் தலைவர்களும் நூலகங்களில் பெரும் நேரத்தைச் செலவிட்டவர்களே. அத்தகைய முன்னேற்றத்திற்கு கருவியாக விளங்கும் நூலகங்களை வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம்'' என்றார்.

# ஆயுத உற்பத்தியாளர்களின் வருவாய் அதிகரித்துள்ளது!



உலகின் மிகப்பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் 2024 இல் ஆயுத விற்பனையின் மூலம் அதற்கு முந்தைய ஆண்டை விட 5.9 சத வீத அதிகரிப்பைக் கண்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute - SIPRI) இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அது வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 2024 இல் 100 பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனங்களின் வருவாய் 679 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பு உலகெங்கினும் ஏற்பட்ட போதிலும், அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் தளமாகக் கொண்டு செயற்படும் ஆயுத உற்பத்தி நிறுவனங்களே அதிக வருவாயை ஈட்டிக் கொண்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

முதல் 100 இடங்களில் உள்ள அமெரிக்க நிறுவனங்களில் 30 நிறுவனங்கள் – லொக்ஹூட் மார்ட்டின், நோர்த்ரோப் க்ரம்மன் மற்றும் ஜெனரல் டைனமிக்ஸ் உட்பட – அதிக வருவாயைப் பதிவு செய்துள்ளன. அவற்றின் ஒருங்கிணைந்த வருவாய் 3.8 சத வீதம் அதிகரித்து 334 பில்லியன் டொலராக இருந்தது.

ஐரோப்பாவில் உள்ள 26 நிறுவனங்களில், ரஸ்யாவைத் தவிர்த்து, 23 நிறுவனங்களின் வருவாய் அந்தக் கண்டத்தில் செலவினங்கள் அதிகரித்ததால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் போருடன் தொடர்புடைய தேவை மற்றும் ரஸ்யாவின் அச்சுறுத்தல் ஆகியவற்றால் அவற்றின் மொத்த வருமானம் 13 சத வீதம் அதிகரித்து 151 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது.

உக்ரைனுக்கு பீரங்கி குண்டுகளை வாங்குவதற்கான அரசாங்கத் தலைமையிலான ஒரு திட்டத்தின் காரணமாக செக்கோஸ்சிலோவாக்கியக் குழுமத்தின் வருவாய் 198 சத வீதம் அதிகரித்தது. அத்துடன் உக்ரைனியன் (JSC) பாதுகாப்புத் துறையின் வருவாய் 41 சத வீதம் அதிகரித்தது.

ஐரோப்பிய நிறுவனங்கள் அதிக தேவையைப் பூர்த்தி செய்ய புதிய உற்பத்தித் திறனில் முதலீடு செய்கின்றன. ஆனால், SIPRI ஆராய்ச்சியாளர் ஜேட் குய்பெர்டோ ரிக்கார்ட் கருத்து வெளியிடுகையில், "மூலப் பொருட்கள் வளர்ந்து வரும் சவாலை ஏற்படுத்தக்கூடும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன், சீன ஏற்றமதி கட்டுப்பாடுகளின் காரணமாக, முக்கியமான கனிமங்களுக்கான விநியோகச் சங்கிலிகளை மறுசீரமைப்பது ஒரு சிக்கலாக இருக்கும்.

SIPRI பட்டியலில் உள்ள இரண்டு ரஸ்ய நிறுவனங்களான Rostec மற்றும் United Shipbuilding Corporation ஆகியவற்றின் வருவாய் 23 சத வீதம் உயர்ந்து 31.2 பில்லியன் டொலர்களாக இருந்தது. தடைகள் உதிரிப் பாகங்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்த போதிலும், திறன்மிக்க தொழிலாளர்கள் ஒரு சவாலாக இருந்தாலும், வீழ்ச்சியடைந்து வரும் ஆயுத ஏற்றுமதியை ஈடுசெய்ய உள்நாட்டுத் தேவை போதுமானதாக இருப்பதாக SIPRI தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கிலும் ஆயுத வருவாய் அதிகரித்துள்ளது. மூன்று இஸ்ரேலிய நிறுவனங்களின் வருவாய் 16 சத வீதம் அதிகரித்து, 16.2 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளது.

2024 இல் காசாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர்வினை, "இஸ்ரேலிய ஆயுதங்கள் மீதான ஆர்வத்தில் சிறிதளவு தாக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரிகிறது" என SIPRI ஆராய்ச்சியாளர் ஜூபைடா கரீம் கூறியுள்ளார்.

ஆசியா மற்றும் ஓசியானாவில் வருவாய் 1.2 சத வீதம் குறைந்ததிற்கு குறியீட்டில் உள்ள 8 சீன நிறுவனங்களின் வருமானத்தில் சரிவு ஏற்பட்டதே காரணம். சீன ஆயுதக் கொள்வனவில் பல ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக கடந்த ஆண்டு முக்கியமான சில ஒப்பந்தங்கள் தாமதமாகவோ அல்லது இரத்துச் செய்யப்பட்டதாகவோ இருந்தது என SIPRI தெரிவித்துள்ளது.

---

நமது நாட்டில் முதலாளி வர்க்க, குட்டி முதலாளித்துவ சித்தாந்தமும், மார்க்சிய எதிர்ப்பும் இன்னும் நீண்ட காலம் நிலைத்திருக்கும். நமது நாட்டில் சோசலிச அமைப்பு அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. உற்பத்தி சாதனங்களின் உடமைமுறை மாற்றத்திலும் நாம் அடிப்படை வெற்றி ஈட்டியுள்ளோம். ஆனால் அரசியல், சித்தாந்த முன்னணிகளில் நாம் இன்னும் முழு வெற்றி பெறவில்லை. சித்தாந்த துறையில், பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தில் 'எது வெல்லும்' என்ற பிரச்சனை உண்மையில் இன்னும் தீர்க்கப்படவில்லை. முதலாளித்துவ வர்க்க, குட்டி முதலாளித்துவ வர்க்க சித்தாந்தத்திற்கு எதிராக நாம் இன்னும் ஒரு நீடித்த போராட்டத்தை நடத்த வேண்டியதிருக்கிறது. இதைப் புரிந்து கொள்ளாமல் சித்தாந்தப் போராட்டத்தை கைவிடுவது தவறு. தவறான கருத்துக்களை எல்லாம், நச்சுக்களை எல்லாம், பூதங்களை பிசாசுகளை எல்லாம் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவை தம் விருப்பப்படி தலைவிரித்தாடுவதை அனுமதிக்கக் கூடாது. இருந்தும் விமர்சனம் என்பது நியாயம் நிறைந்ததாக, ஆராய்ந்து விளக்குவதாக, நம்பிக்கையூட்டுவதாக இருக்க வேண்டும். கரடு முரடான அதிகாரத்துவம் உடையதாக, அல்லது வறட்டு வாதமாக இருக்கக் கூடாது. நிலையியல் அடிப்படையிலானதாக இருக்கக் கூடாது.

– மாவோ

**முன்பக்கத்தொடர்ச்சி...**

படைத்த ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும், ஜே.வி.பியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான சுனில் ஹெந்துநெத்தியும் அரசியல் அமைப்பில் தற்போது இருக்கும் 13ஆவது திருத்தச்சட்டம் புதிய அரசியல் அமைப்பின் மூலம் நீக்கப்படும் என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

அதாவது, சிறுபான்மை இனங்களுக்கு தற்பொழுது சில உரிமைகளையாவது வழங்கும் மாகாண சபை முறை நீக்கப்படும் என மறைமுகமாகச் சொல்கிறார்கள்.

இப்படியான ஒரு சூழலில், தற்போதைய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஜனாதிபதி புதிய அரசியல் அமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும் என தமிழரசுக் கட்சி தூதுக்குழுவிடம் சொன்னாலும், அது ஒரு பொய் வாக்குறுதி என்பது மிகவும் தெளிவானது.

ஏனெனில், அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கான எந்தவொரு ஆரம்பக்கட்ட வேலைகளையும் கூடத் தொடங்கவில்லை. உண்மையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வரும் நோக்கம் எதுவும் அரசாங்கத்துக்கு இல்லையென்பதே நன்கு விடயமறிந்த அரசியல் வட்டாரங்களின் கருத்தாகும்.

அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதற்கு விரும்பாமைக்கு சில காரணங்கள் இருக்கின்றன. பிரதானமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

முதலாவது காரணம், தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய பல முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்பது. ஆனால் இப்போது அரசாங்கம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் மனநிலையில் இல்லை.

அதற்குக் காரணம், அரசாங்கம் அன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு இருந்த மனநிலையைப் பயன்படுத்தி, பொய் வாக்குறுதிகள் பலவற்றை அள்ளிவீசி ஆட்சிக்கு வந்தாலும், இன்று மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் செல்வாக்கு முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலிலும் வெற்றிபெற முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

எனவே, இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் தான் விரும்பியதைச் செயல்படுத்துவதற்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு எந்தவொரு கருவிகளும் இல்லை. எனவே, அரசாங்கம் புதியதொரு அரசியல் அமைப்பைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து, தனது தலையில் தானே மண் அள்ளிப்போட ஒருபோதும் விரும்பாது.

நிலைமை இப்படி இருக்கையில், அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வந்து அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என ஜனாதிபதி தமிழரசுக் கட்சி தூதுக்குழுவிடம் சொன்னது முற்றுமுழுதான பொய்யாகும்.

இந்த விடயத்தில் மட்டும் அரசாங்கம் பொய்யுரைக்கவில்லை. வேறு விடயங்களிலும் அப்பட்டமான பொய்யுரைத்துள்ளது. உதாரணமாக –

தாம் ஆட்சிக்கு வந்தால் முன்னைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என்று சொன்னது. ஆனால், அதற்கு மாறாக, ரணில் செய்த அதே ஒப்பந்தத்தை எந்தவிதமான மாற்றமும் இன்றி அனுரகுமார அரசாங்கமும் தொடர்கிறது.

அதேபோல, தாம் ஆட்சிக்கு வந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றுமுழுதாகவும் உடனடியாகவும் நீக்குவோம் என்றது. ஆனால் பழைய சட்டத்தை நீக்கிவிட்டு, அதைவிட மோசமான புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவை போலத்தான் அரசாங்கத்தின் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு, இனப்பிரச்சினை தீர்வு விடயங்களும் இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனவே, அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வந்து, இனப்பிரச்சினைகுத் தீர்வு காணும் என எதிர்பார்ப்பது, 'இலவு காத்த கிளி'யின் கதை போலாகிவிடும்.

ஆனபடியால், இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு காண்பதை நோக்கிச் செல்வதானால், அனைத்து தமிழ் தேசியவாத சக்திகளும் கருத்து வேறுபாடுகளை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரு பரந்த முன்னணியாக ஐக்கியப்பட்டுப் போராடுவதே ஒரே வழி. ஆனால், அது மட்டும் போதாது. தமிழ் மக்களின் நீதியான கோரிக்கையின் பக்கம் நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் சிங்கள மக்களையும், சர்வதேச சக்திகளையும் திருப்பவும் வேண்டும்.

இது மட்டுமே தமிழ் மக்களின் நீதியான கோரிக்கையை வென்றெடுப்பதற்கான ஒரேயொரு வழியாகும்.

---

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

தவறுக்குப் பிரதிபலனாக, சோமாலிய கடலைச் சுத்திகரிக்க, நவீன தொழில்நுட்பங்களையும், நிதியுதவியையும் வழங்க வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சோமாலிய மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க 'கடல் பாதுகாப்பு மண்டலங்கள்' உருவாக்கப்பட்டு, நச்சு பாதிப்பு இல்லாத பகுதிகளில் மட்டும் மீன் பிடிக்க இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் வறுமைக்குப் பின்னால் எவ்வளவு பெரிய சர்வதேச சதி இருக்கிறது என்பதை அறிய வருகையில், மிகுந்த வேதனையாகவும் கோபமாகவும் இருக்கின்றது.

---

**4ம் பக்கத்தொடர்ச்சி...**

வளர்த்து, உற்பத்தி திறனை அதிகரித்து, தொழிலாளர்களை வெளியேற்றும் என்பதை விளக்கியுள்ளார்.

1848 கம்யூனிஸ்ட் அறிக்கை "உற்பத்தி சாதனங்களைத் தொடர்ந்து புரட்சிகரமாக்காமல் முதலாளித்துவ வர்க்கம் இருக்க முடியாது. அதன் மூலம் உற்பத்தி உறவுகளையும், அவற்றுடன் சமுதாயத்தின் முழுத் தொடர்புகளையும் மாற்றி விடுகிறது" என்ற சாராம்சத்தை முன்வைக்கிறது. இயந்திர வளர்ச்சி மற்றும் அதன் தாக்கம் குறித்த அவர்களது கண்ணோட்டம் இன்றைய நிலைமைக்கும் பொருந்துகிறது.

---

மனிதனின் உணர்வு நிலை அவனது வாழ்வைத் தீர்மானிக்கவில்லை. மனிதனின் சமூக வாழ்நிலையே அவனது உணர்வு நிலையைத் தீர்மானிக்கிறது.

**– கார்ல் மார்க்ஸ்**

# சோமாலியர்கள் எவ்வாறு கடல் கொள்ளையர்களாக மாறினார்கள்?

1990களில் ஆபிரிக்க கண்டத்திலுள்ள சோமாலியா உள்நாட்டுப் போரினால் நிலைகுலைந்து கிடந்தபோது, உலகம் அந்த நாட்டை ஒரு கைவிடப்பட்ட தேசமாகவே பார்த்தது.

ஆனால், இத்தாலியப் பத்திரிகையாளரான இலாரியா அல்பி (Ilaria Alpi), சோமாலியா பற்றிய மிகவும் அதிர்ச்சிகரமான விடயத்தை உலகின் முன்னால் வெளிக் கொணர்ந்தார்.

அதாவது, சோமாலிய கடற்கரைகளுக்கு மர்மமான முறையில் வந்து சென்ற கப்பல்கள் உணவைக் கொண்டு வரவில்லை, மாறாக வளர்ந்த நாடுகளின் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறிய கதிரியக்க கழிவுகளையும், இரசாயன விசங்களையும் கொண்டு வந்து அங்கு கொட்டின என்பதை இலாரியா கண்டு பிடித்தார்.

ஒருபுறம் சோமாலியாவுக்குள் ஆயுதங்கள் கடத்தப்பட, மறுபக்கம் சோமாலியாவின் கடல் பரப்பு வளர்ந்த நாடுகளின் குப்பைத் தொட்டியாக மாற்றப்படுவதை அவர் தனது புகைப்படக் கருவியால் ஆவணப்படுத்தத் தொடங்கினார்.

இலாரியா தனது பயணத்தின் போது சோமாலியாவின் மீனவக் கிராமங்களில் வாழும் மக்கள் பலவித நோய்களால் இறப்பதையும், பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகப் பிறப்பதையும் அவதானித்தார்.

'இது ஒரு போர் அல்ல, ஒரு தேசத்தின் மீது நடத்தப்படும் இரசாயனத் தாக்குதல்' என மனதுக்குள் சொல்லிக் கொண்டார்.

அதாவது, 'மனிதாபிமான உதவி' என்ற பெயரில் சோமாலியாவுக்கு ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக இரசாயனக் கழிவுகளை அங்கே கொட்டியது உறுதி செய்யப்பட்டது.

இலாரியா என்ற அந்த வீர மங்கை சோமாலியாவின் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட நச்சுப் பொருட்களுக்கும், இத்தாலிய நிறுவனங்களுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருப்பதை வெளிக் கொணர்ந்த போது ஆளும் வர்க்கம் ஆடிப்போனது.

அதன் விளைவாக, 1994 ஆம் ஆண்டு மார்ச் 20ந் திகதி இலாரியாவும் அவரது ஒளிப்பதிவாளர் மிரான் ஹ்ரோவாட்டினும் (Miran Hrovatin) சோமாலிய தலைநகர் மொகடிஸு (Mogadishu) வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



இலாரியா அல்பி மிரான் ஹ்ரோவாட்டி

இலாரியாவின் மரணத்திற்குப் பிறகுதான், சோமாலியாவின் கடல் எப்படிச் சிதைக்கப்பட்டது என்பதும், வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்கள் ஏன் ஆயுதம் ஏந்தி கடற் கொள்ளையர்களாக மாறினார்கள் என்பதும், உலகிற்கு மெல்லப் புரியத் தொடங்கியது.

இன்று சோமாலியா மெல்ல மெல்ல மீண்டுவர முயற்சித்தாலும், அன்று கொட்டப்பட்ட நஞ்சுகள் கடலுக்கு அடியில் இருந்து கசிந்து கொண்டுதான் இருக்கின்றன.

இலாரியா அல்பி கொல்லப்பட்ட பிறகு, இந்த விவகாரம் இத்தாலியிலும் சர்வதேச அளவிலும் ஒரு மிகப்பெரிய அரசியல் புயலைக் கிளப்பியது. அவர் எதை உலகிற்குச் சொல்லக்கூடாது என்று அந்த மாஃபியா கும்பல் நினைத்ததோ, அதே உண்மையை அவரது மரணம் உரக்கச் சொல்லத் தொடங்கியது.

இத்தாலிய அரசாங்கம் ஒருபுறம் இந்த வழக்கை மூடிமறைக்க முயன்றாலும், மக்கள் கொடுத்த அழுத்தத்தால் ஒரு நாடாளுமன்றக் குழு அமைக்கப்பட்டு, நீண்ட விசாரணை நடந்தது. இந்த விசாரணையில், இத்தாலிய உளவுத்துறைக்கும் அந்த நச்சுக்கழிவு நிறுவனங்களுக்கும் இடையே இருந்த உறவுகள் அம்பலத்துக்கு வந்தன.

இலாரியாவின் மரணத்திற்காக ஒரு அப்பாவி சோமாலி இளைஞனான ஹாஸி உமர் ஹசன் மீது பழி சுமத்தப்பட்டு, அவன் 16 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டான். பின்னர் அவன் நிரபராதி என்பது நிரூபிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டபோது, இது எவ்வளவு திட்டமிட்ட ஆழமான சதி என்பது உலகிற்குத் தெரிய வந்தது.

தற்போது சோமாலியாவில் புதைக்கப்பட்டுள்ள நச்சுக் கழிவுகளை அகற்ற எடுத்து வரும் முயற்சிகள் மிகுந்த சவால் மிகுந்தவையாக இருக்கின்றன. ஏனெனில், 30 வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்ட அந்த நச்சுக் கழிவுகள் கொண்ட இரும்பு பரல்கள் (Iron Barrels) கடலுக்கடியில் துருப்பிடித்து சிதைந்து போயுள்ளன.

ஐ. நா. சபையின் சுற்றுச்சூழல் அமைப்பு (UNEP), தற்போது செயற்கைக் கோள்களையும், நவீன ஆழ்கடல் ரோபோக்களையும் பயன்படுத்தி அந்தப் பெட்டிகள் எங்கெங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் முயற்சியில் இறங்கியுள்ளது.

வளர்ந்த நாடுகள் தாங்கள் செய்த

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**